ஆரம்பக் கல்வி.

௨ 1-2.

ஏப்ரல், மே, 1934.

TL
T15ம 211,N33
.N34.2.1-2
190335

1227

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

பொருளடக்கம்

10 JUN 1935


| | |
|---|---|
| ஆங்கிலம் | |
| சாம்பியன் திட்டம் | 9 |
| கமலபாய் கடிதங்கள் | 14 |
| ஆன்றோர்களின் அறிய மொழி | 16 |
| சைவ சமயம் | 17 |
| ஆரம்பக் கல்வி விருத்தி | 20 |
| கிராம பஞ்சாயத்து போர்டு | 23 |
| ஆரோக்கியக் கணக்கு | 27 |
| உதய குமாரன் | 29 |
| கை மருந்துகள் | 32 |
| விவசாயம் | 35 |
| நமது நாடும் கல்வியும் | 38 |
| சங்கக் குறிப்புகள் | 44 |




1227
72
715ஈ211,N33
N34.2-1-2
190335

P.C.N.

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட

| | | | | |
|---|---|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன், | | 1 | 0 | 0 |
| வெளி நாடுகளுக்கு | .... .... | 2 | 0 | 0 |

குறைந்த சந்தாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கெனவே உழைத்து வரும் சஞ்சிகை. ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும், ஆசிரிய மானேஜர்கள், தாலூக்காபோர்டு, முனிசிபாலிடி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மிஷன் பாடசாலை, பஞ்சாயத்து பாடசாலை ஒருவித உபகாரமும் பெறாத பாடசாலைகள், ஆண் பாடசாலை பெண் பாடசாலை, ஆகிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தும் "ஆரம்பக் கல்வி" என்னும் இந்த சஞ்சிகையின் மூலமாய் தத்தம் குறைகள் நீங்கி ஆரம்பக்கல்வி யாசிரியர்களும், காலச் சக்கரத்தின் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதே நமது நோக்கம். ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் நமது சஞ்சிகையை ஆதரித்து பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி ஆசிரியர் பகுதி, கல்வி வளர்ச்சி, என்ற பகுதியின் கீழ் விஷயதானமும், பொருளுதவியும் செய்து வளர்த்த வேணுமாய்க் கோருகிறேன்.

இங்ஙனம்:
பத்திரிகை, ஆசிரியர்.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழுபக்கம் ஒரு தடவைக்கு | ரூ. | 10 | 0 | 0 |
| அரை பக்கம் ,, | ,, | 5 - | 0 | 0 |
| கால் பக்கம் ,, | ,, | 3 . | 0 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்


# ELEMENTARY EDUCATION.

PUBLISHED MONTHLY

The organ of the Provincial Teacher Managers' Association.
Devoted to the cause & uplift of Ele. Teachers, Teacher managers & Managers of Aided Schools.

Editor. *P. VEERARAGAVAN.*
Member, District Educational Council Madras.

Vol 2.] April & May 1934. No. I & II


## OURSELVES.

The primary object of this Journal is to keep teachers engaged in Elementary Education informed of educational principles and methods, in so far as these are concerned with the first phase of education, and as they undergo fresh orientations and modifications Generally speaking an Elementary School teacher in India is a neglected factor, if not a despised trifle, although it is he that performs the primary task of guiding the conduct and moulding the character of children in the formative period of their careers In all civilised countries where there subsists a live relationship between the Governed and the governing or where both are the same it is recognised that elementary education is a nation-building momentum and that the general character of the people depends very much on the way elementary education is handled. In India, however, it is a different story. Indeed the attenders at the beck and call of the superior officials are better remunerated than the elementary school teachers.

In days of yore, in India, every village was a self-sufficient—more or less—and self-reliant republic wherein the school master engaged a unique position of privilege, respected and patronised by the whole village. He was not a jaded pedagague but a great moral force He not only imparted instruction to his pupils in the three R's but was in all conceivable ways, their true friend, guide and philosopher. In course of time the village lost its individuality and merged into a general chaos of mass life under muslim rule: also the villages, continued to maintain their individuality and vigour; but during the transition between the muslim Sovereignty and the British Suzeranity, it was all chaos, and as the British power permeated more and more and the Government become more and more centralised, the villages sunk into the welter of a renascent nationalism. This process might have been to the good of the people had the Government been their own. This being not so, the loss of individuality entailed on the villages has paralysed all wholesome activities of the people. On this account education has suffered most.

The age-long educational traditions of India are not quite dead. They have been preserved by privatesch ools as well as they can in changing circumstances.

The private schools have received some state support, though this is hardly commensurate with the value and importance of the work done therein. But for the private agency the progress of elementary education, such as it has been could not have been even as much as it has been. The policy of the state should be therefore to utilise the private agency more and more for spreading education instead of discouraging it with paltry grants and inspectoral inquisitions. Schools conducted by public agencies can never be as efficient as those conducted by private agencies, because in the former category of schools there is no direct relationship between the teachers and parents and the teachers are naturally prone to shirk their responsibility towards parents, whereas the schools conducted by private agencies owe their very existence to the goodwill sympathy and support of the parents. Besides more often than not, schools conducted by public agencies are apt to be used as pawns in the political game and as engines of party propaganda at times of elections, while schools managed by the private agencies are quite free from such contaminating influences.

This Journal will generally stand for the interests of aided schools, uphold their couse, and defend their integrity from being assailed by nostrums like the Champion scheme of amalgamation consolidation and concentration. It will not oppose measures emanating from the Government simply because they thus orginate; it will view them and adjudicate upon their merits, if it feels that the Government are persuing the the proper policy, it will offer its ungrudging support there to: however if it comes to the conclusion that the Government are pursuing a course that may lead to undesirable consequences and avoidable complications it will offer its constructive criticism in restrained and sober, measured and dignified language that appeals to reason without rubbing the butt of criticism in the wrong place. Its attitude towards the Champion Scheme is typical of the policy indicated above It subscribes as enthusiastically as the illustrious author of the scheme to the twin principles of efficiency and economy, for no one outside bedlam will take exception to these. It is no doubt desirable that wastage should be avoided; but in our zeal for economy we cannot stultify ourselves The position is rather bewildering. Real efficiency cannot be secured if meticulous regard is paid to economy: and to throw economy to the winds would be rediculous folly; greater utilisation of aided schools is the rational via media available.

190335 T15m211, N33
N34.2.1-2

16 JUN 1935

# CHAMPION SCHEME.

The attitude of the Government towards aided Elementary schools is changing as often as the colour of the cameleon. Instead of strengthening the aided agency so as to make it the leaven of elementary education, the Government are often led into making experiments that are calculated to cripple the Aided schools. The scheme adumbrated by Mr. Champion is one such experiment fraught with dire consequences to Aided Elementary Schools. It aims at efficiency and economy by means of amalgamation, consolidation and concentration of the existing schools.

As things stand at present, the educational needs of children in the rural areas are satisfied by a large number of small schools, wherein what is called plural-class teaching is generally prevalent, that is one teacher handles more than one class. This, in Mr. Champions view, causes inefficiency and wastage. To secure both efficiency and economy, a teacher must handle only one class, and each class must have the minimum strength of 30 pupils. Starting with these criteria, Mr. Champion suggests thal rural areas should be divided into school units each with a radius of one mile and possessing a large central school with full classes of 30 pupils each with a separate teacher for each class; the central school shall be that which is so by virtue of its location within the unit of school area and the other schools within the area shall be mere feeders.

On paper Mr. Champion's Scheme seems well conceived and well drawn: but it bristles with many difficulties when it is brought to practical application. In the first place, each school in the rural area supplies some peculiar local need. People in the locality would prefer it to a central school, however defective it (the former) may be from Mr. Champion's viewpoint; and so Mr. Champion would leave such schools untouched by his scheme. He has to exclude from his scheme also the Muhammedan schools, and then there is the difficulty of combining the schools intended for the depressed classes with those meant for the caste-Hindu pupils. Such forced combination, as experience indicates is bound to lead to boycot by one party or the other As for the schools meant for girls, the scheme leaves out such of them as are intended for Muslim girls who observe 'gosha' and cannot therefore be huddled into central schools. Co-education is favoured as regards the other girls where public opinion is not strongly against it, and where it is pronouncedly unfavourable, separate sections are to be

opened in the central schools. Thus watered down, the Scheme is capable of application only in such areas where the aforesaid difficulties are non-existent.

We are concerned with the fate of the aided Schools (vis a vis) the Champion scheme while the author would leave it to the management of an aided School whether or not it would amalgamate with the central School, the educational authorities of the Government would appear to be bent upon forcing the scheme down the throats of the managers of aided schools: several such managers have been visited with peremptory communications not inviting suggestions but offering practical schemes of amalgamation. The managers of aided schools are generally at the beck and call of the Inspecting officers and dread the consequences of not complying with their demands. In effect, therefore, the managers are intimidated into accepting the scheme. This is most undesirable.

The views of the Director of Public Instruction as regards the Champion scheme are note worthy. "The Director of Public Instruction" writes Practical in **The South Indian Teacher** seems, however to have been in frequent correspondence with the Government on this subject and submitted a special report also. In that special report he has brought to the notice of Government certain difficulties in the way of introducing the scheme as formulated by Mr. Champion. He has also observed that the lukewarmness of the local bodies in the matter might be due to the apprehension that they will lose the subsidies sanctioned for the schools to be amalgamated. He has therfore recommended that local bodies might be allowed to keep the savings to themselves and utilise them for educational purposes. Government have however expressed their inability to pass a general order of this kind in the absence of information as to the financial effects of the adoption by all local bodies of a scheme of consolidation and concentration of schools; what is exactly behind the mind of Government is not easily understood.

No scheme is going to involve additional expenditure from the provincial funds for the maintenance of schools. Again they say that each case will be decided on its merits but the previous sentence in the order indicates that the schemes of all local bodies in the Presidency must be considered together that the full financial effects of the scheme may be ascertained. Thus no scheme can mature and will be ready for adoption until all the schemes have been received and scrutinised.



"Among the difficulties pointed out by the Director are the option given to private schools to continue if they do not agree to amalgamation, the lack of interest and enthusiasm on the part of local bodies to initiate schemes of concentration and the slowness with which local bodies and District educational councils generally deal with such schemes. He has therefore suggested that all classes of schools should be included for purposes of amalgamation, that schemes should be prepared by the officers of the Education Department and forwarded to local bodies and District Educational councils should be required to send them to him for approval within a prescribed time. Government, while generally accepting his suggestions have stated that in view of possible opposition from some quarters, only the maximum amalgamation possible under the circumstances should be aimed at and that the schemes themselves should be forwarded to Government for final orders. They have prescribed a time limit of two months for the Inspecting officers and four months for local bodies and District Educational councils scrutiny and transmission. This modified scheme which has come to be styled as Champion-cum-Reddi scheme, is, it will be readily conceded, much more drastic and impracticable than its original and it is therefore no wonder that it has created a storm in the educational world."

The attitude of the managers of aided schools must be clearly stated. They are not opposed to efficiency and economy; nor are they opposed to the amalgamation, consolidation and concentration of the existing schools, if by this process both efficiency and economy can be secured. It is their considered view that the Champion scheme, far from securing the twin objects of efficiency and economy is calculated to disable the aided agency and thereby to retard educational progress. The scheme is fundamentally incompatible with the main objective of the Government namely, Universal education. The Provincial Teacher-managers' association has urged the desirability of making experiments with the scheme in certain localities and on finding such experiments successful, proceeding apace. This is a sane course and we support it heartily.

## ELY. EDUCATION AND STATE AID

(By Mr. R. Swaminatha Aiyar.)

It is said that the school is the nursery of a nation, that children form the most valuable asset of a state and that the civilization of a country should be judged by the care and atten-

tion bestowed upon the upbringing of its children. It behoves every State therefore to do its utmost to educate its children well and thus ensure the wellbeing of its subjects and any legitimate expenditure to be incurred in this connection must be ungrudgingly allowed.

To declare policies and issue directions but to stint the necessary expenditure is by no means reassuring. It is proclaimed that education is preminently a nation-building activity and all expenditure of it must be deemed an investment of high national importance and would ensure in the fulness of time an adequate return in the shape of national uplift and efficiency In all administrations, public or private Education does not seem to receive the treatment it deserves, while other items of distinctly less importance are said to receive more than their legitimate share of public attention. The illiberal treatment accorded to education it is said makes the system effect and leads to disappointing results. The disappointed public look for the cause of the failure in the wrong quarter and lay the blame upon the devoted head of the poor teacher.

### How the Failure Arises.

In 1930-31 British India spent on Education about 6 per cent of its aggregate revenue. Baroda has been spending during the last four years from 35 to 29 per cent of its total land revenue on Education. It may be observed by the way that the British Indian Expenditure in 1930-31 on military services was about 26 per cent of its total revenue while its education expenditure was, as has been stated only 6 per cent.

For a population of 97 millions the United States of America is said to have expended tn 1913 something like 240 crores of rupees on education whereas the British Indian expenditure for the year seems to have been about 8 crores for its population of about 225 millions. On the scale of the United States the Indian expenditure should have been about 600 crores. Where are 600 crores and where 8?

The Government of India Publication "India in 1931-32, devotes about a page and a quarter to university education and disposes of Primary Education in a few lines, pleading want of funds to carry out the proposals before them for improvement involving additional expenditure. The Report on Progress of Education in Madras Presidency for 1932-33 speaks to a noticeable falling off in the number of aided Elementary Day and Night Schools and the pupils attending them. Part time and Teacher-Manager schools have likewise suffered considerable diminution both in number and strength. The same Report shows a decrease from the previous year of Rs. 112,258 in Provincial contribution towards the cost of Elementary Schools for Indian boys and girls.



### The Plight of aided Schools.

The report is that there has been about 20 per cent cut in the subsidies and the District Educational Councils are at a loss to see how and in what proportions the assessed grants should be retrenched. If as is said, there has been a cut of 20 per cent in the subsidies, the elementary schools must necessarily suffer at least a 20 per cent cut in their grants with the inevitable result of the teachers being paid distinctly 20 per cent less. The teachers are none too handsomely paid; their annual salaries seldom exceeding Rs. 130. If out of this pittance 20 per cent is deducted what would remain? Would it be enough for the poor teacher to keep body and soul together? How could he maintain a family if he had one? The good government that sympathised with its employees so much as to arrange to restore the cut of 10 per cent in their salaries has allowed retrenchment in the subsidies to aided elementary schools which would lead to a cut of not less than 20 per cent in the salaries of the teachers, who after all are not having even a living wage. "Hope springs eternal in the human breast" and the poor teachers must be hoping for better days for them and their families to have a full meal. Could they in these circumstances do their schoolwork wholeheartedly?

### What is Expected of Them.

The Educational authorities expect of them absolute efficiency and thorough systematic work so as to make the most loyal subjects and the most enlightened citizens of the children in their charge. Failure to meet this requirement may end in their dismissal or in the closing down of their schools The latest Madras Public Instruction Report speaks of the abolition of 1,716 ill-working part-time and night schools and 90 ill-working girls schools. Efficiency and reasonable economy are of course essential and must be secured anyhow. But abolition of schools does not seem to be the right way of achieving the end aimed at. What is amiss must be set right by repeated looking into and careful counselling. Abolition is most undesirable, when literacy is so low in the country and schools are needed in ever so many place.s It should be thought of only when all other means to rectify matters fail.

Neither are the demands of the parents and guardians f school children and the general public less exacting in res-

pect of the teacher. He should demonstrate in himself all conceivable virtues and serve as friend, philosopher and guide to all about him. He is expected to treat his school as a temple and give of his best to the children in his keeping. He has uot merely to get his pupils to quality for a footing in life but to make paragons of them, He is expected to start or participate in all activities calculated to promote social harmony and uplift.

All this and more is expected of a ten or fifteen rupee man who is in perpetual dread of a heavy cut in his wage and can never feet eaay of heart to give undivided attention to the task before him. If the work he shows falls short of the ideal, who is to blame? Is he not helping the State in training up its future citizens? As such is he not a State-employee? Does it not behove the state to see that his wage is subject to no cut and he is kept above want? Again, what does the Society, for which he toils and whose children he brings up, do to him? How does it make life easy to him? In what way does it recompense his efforts in the people's cause? What again do the parents and guardians of school-children do to require the teachers good services, beyond paying the tuition fee? Do they realise at all how much the teachers lighten their own responsibility in respect of their children and what a deep debt of obligation they are under?

## Suggestions.

The situation is not beyond mending. Those concerned must look about in increased sympathy. In fact the authorities seem to have appointed a committee to look into the question of Elementary Education, but all proposals involving additional expenditure are held over, it is said, owing to financial stringency. One would be surprised that the Government with its solicitude for national progress and efficiency and its enormous wealth of resources should plead want of funds to finance this all-important nation-building activity. Where there is a will there is a way. The State expenditure on education has been said to be only about a sixteenth part of its revenue. Would it not be possible for the Government to find for it some little additional funds by cutting down a bit the various other items of its expenditure? Having provided the additional funds required, the authorities should earmark a good proportion of them for expenditure on teaching grant.

From the latest Report of Public Instruction in Madras it is seen that the average cost of elementary education of an Indian is Rs. 12-12-0 in a Government School, Rs 10-3-0 in a board school and Rs.6-12-0 in an aided school. (to be continued)

# சாம்பியன் திட்டம்.

## சில குறிப்புகள்.

திரு. எம். வி. வாசுதேவ சர்மா அவர்கள் பீ.ஏ. எல்.டீ.

தற்கால நிலைமையில் பாடசாலைகள் அநேகமாய்ச் சிறிய சங்கியை யுடையதாகவும், ஒரே உபாத்தியாயர் போதித்து வருவதாகவும் இருக்கின்றன. சற்று சுமாரான பாடசாலைகளிலும் ஒரு உபாத்தியாயர் இரண்டு வகுப்புகளையும் ஏககாலத்தில் போதிக்கக் காணலாம். இவ்வாறு வேலை செய்வதில் ஒரு வகுப்பைக் கவனித்து வரும்பொழுது மற்றொரு வகுப்பு, வேறு பாட மூலமாக வேலைகொடுக்கப்பட்டாலும், முற்றிலும் கவனிக்கப்பட முடியாது. அதனால் பிள்ளைகளின் தேர்ச்சி வகுப்புக்குரிய அளவுக்கு ஏற்படுவதில்லை கீழ் வகுப்புகளில் தேர்ச்சி குறைவால் அதிக காலம் தங்குவதும், சிலர் அதிலேயே வெறுப்புண்டு அல்லது அதிக நாள் பாடசாலைக்குப் போய்ப் படிக்கச் சக்தியற்றுப் படிப்பை நிறுத்திவிடும்படி நேரிடுகிறது. கீழ் வகுப்புகளில் அதிகம் பிள்ளைகள் படித்தாலும், 2-வதிலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் பிள்ளைகளின் சங்கியை மிகக் குறைந்து, பிரதி வருஷம் பாடசாலையை விட்டு வெளியேறுகிறவர்களில் சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகப் பாவிக்கப்படுகிறவர்கள் மிகச் சிலரேயாவர். இக்குறையை நிவர்த்தி செய்யப் பிரதி வகுப்பிற்கும் தனி உபாத்தியாயர் இருக்கவேண்டுமென்பதும் அவ்வுபாத்தியாயருக்குப் போதுமான அளவு வேலையிருப்பதற்குக் குறைந்தது 30 பிள்ளைகளாவது இருக்கவேண்டுமென்பதும் சாம்பியன் ஸ்கீமின் அடிப்படையான நோக்கமாகும்.

பாடசாலையில் படிக்கக்கூடிய மாணவர்கள் அப் பாடசாலையின் இருப்பிடத்தைச் சுற்றி ஒரு மைல் தூரத்திற்குள் வசிப்பவர்களாகவிருக்கலாம். அதாவது அந்தப் பிரதேசத்திலிருந்து மாணவர்கள் சாதாரணமாக சதா பாடசாலைக்குப் போக சாத்தியப்படாமல் இருக்கவேண்டும். பல பாடசாலைகள் ஒன்றுக்கொன்று பக்கமாக வேலை செய்வது அனுவசியமாகவிருப்பதோடு போட்டி விஷயத்திலும் பிள்ளைகள் ஒரு பாடசாலையிற் தொடர்ந்து படிக்காமல் அடிக்கடி மாறி வருவதால் அவர்களைப் பற்றிய பொறுப்பும் குறைந்து பாடசாலைகளின் சாசுவத வேலையும் குறைவுபடும். ஒரு குறிப்பிட்ட வேலைக்கு ஒரு வேலைக்காரன் போதுமானால் மற்றொருவனை நியமனம் செய்பவர்

களுண்டோ; அல்லது ஒரு சாத்திரம் அல்லது ஆஸ்பத்திரி ஒரே ஊரில் வைக்கப்பட்டபின் மறுபடியும் அதேமாதிரி ஸ்தாபனங்களை எவர் வைக்கச் சம்மதப்படுவர்?

ஒரு மைல் தூரத்திலுள்ள பிள்ளைகள் மத்தியமான பாடசாலைக்குப் போவதானால் சிறுவர்களுக்கு, முக்கியமாய்ப் படிப்பை ஆரம்பிப்பவர்களுக்கு அவ்வளவு தூரம் சென்று வருவது அசாத்தியமாகும். ஆகையால் சிறுவர்களுக்கு வீட்டிலிருந்து அரை மைல் தூரத்திற்குள்ளாகவே அவர்கள் படிக்கக்கூடிய வகுப்புகள் மட்டும் வைத்துச் சிறு பாடசாலைகள் நடைபெறவேண்டும். இவைகளில் முதல் மூன்று வகுப்புகள்மட்டுமிருக்கலாம். ஆனால் வகுப்புக்கு ஒரு உபாத்தியாயரும் 30 பிள்ளைகளும் இருக்கவேண்டிய நிபந்தனை இங்கும் உண்டு. இப் பாடசாலைக்கு ஜூனியர் ஸ்கூல் என்று பெயர் வழங்கலாம். பெரிய பாடசாலைகளில் குறைந்தது ஐந்து வகுப்புகளாவது இருக்கவேண்டும். இவைகளுக்குச் சென்ட்ரல் ஸ்கூல் என்று பெயர் வழங்கும்.

சென்ட்ரல் ஸ்கூலில் எல்லா ஜாதிப் பிள்ளைகளும் வித்தியாசமின்றிப் படிக்கவேண்டும். மஹம்மதியர்களும் படிக்கலாம். அவர்களில் தகுந்த சங்கியை இருக்கக் கூடுமாகையால், தனிப் பிரிவு ஒன்று நடத்தவும் கூடும். உருது பாஷை முதலிய மத சம்பந்தமான போதனை முதலிய தனிப்பட்ட ஏற்பாட்டிற்கும் வேண்டிய சௌகர்யம் செய்ய அனுகூலமிருக்கும்.

பெண்கள் படிக்கவும் சென்ட்ரல் ஸ்கூலில் இடமுண்டு. சங்கியைக்குத் தக்கபடி தனிப் பிரிவு வைக்கப்பட்டு, ஸ்திரீகளையே உபாத்யாயர்களாக நியமிக்கலாம். மற்றப்படியும் முதல் வகுப்பின் போதனைக்கு ஸ்திரீகளே தகுந்தவர்களாதலால் அப்படியும் அவர்கள் நியமனம் பெறலாம். இவ்வாறு ஸ்திரீகளை நியமனம் செய்வதால் மாணவிகளைத் தக்க முறையில் கவனித்துக்கொள்ளவும் அவர்களின் சாதாரணப் படிப்புப் பையன்களைப்போலவே நடைபெறச் செய்வதோடு பாட்டு, தையல், குடும்பச் சிக்கன சாஸ்திரம் முதலிய பாடங்களையும் அவர்களுக்குப் போதிக்கச் சௌகர்யப்படும். இப் பள்ளிக்கூடங்களின்சம்பந்தம் இப்பொழுதுள்ள சிறு பாடசாலைகளிலுள்ள சௌகர்யங்களைவிடச் சங்கியை அதிக மிருப்பதுபற்றிச் சென்ட்ரல் ஸ்கூலில் போதனை விசேஷமாக யிருக்கலாம்.



சென்ட்ரல் ஸ்கூல் ஜூனியர் ஸ்கூல் என்னும் வகைப்படி தற்காலமுள்ள பாடசாலைகளைப் பிரிக்கவேண்டும். சில பாடசாலைகளில் பிள்ளைகள் அதிகமாய் இருப்பதால், பிரதி வகுப்புக்கும் போதுமான அளவு அதாவது 30 பிள்ளைகளும் ஒரு உபாத்தியாயரும் முன்னமே இருக்கலாம். முதல் ஐந்து வகுப்புகளாவது உள்ள அப்பேர்ப்பட்ட பாடசாலைகளைச் சென்ட்ரல் ஸ்கூல்களாகத் திட்டம் செய்யலாம். அதைச் சுற்றியுள்ள சின்னப் பாடசாலைகளை ஜூனியர் ஸ்கூல்களாகப் பாவிக்கலாம். ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும் 30 பிள்ளைகள் இருப்பதவசியம். மிகக் குறைவான சங்கியையுள்ள வகுப்புகளை எடுத்துவிடவேண்டும். அப்பேர்ப்பட்ட எடுபட்ட வகுப்புகளின் அல்லது பாடசாலைகளின் பிள்ளைகள் சென்ட்ரல் ஸ்கூலில் சேரலாம். சென்ட்ரல் ஸ்கூல் முனிசிபாலிடி அல்லது லோகல் போர்டாரால் நடத்தப்பட்ட பாடசாலையாக இருக்கலாம். ஆனால் கிராண்டு பெறும் மானேஜர்கள் தங்கள் பாடசாலையில் இதர பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடம் கொடுத்து 5 வகுப்புக்களையாவது நூதன ஏற்பாட்டின்படி நடத்தச் சம்மதப்பட்டால், அப் பாடசாலைகளையும் சென்ட்ரல் ஸ்கூலாக ஒப்புக்கொள்ளலாம்.

முனிசிபாலிடியில் பல பள்ளிக்கூடங்கள் சமீபத்தில் நடைபெறுவதால் சென்ட்ரல், ஜூனியர் என்னும் வகைப்படி பாடசாலைகளை வார்டுகளை யனுசரித்தாவது இதர சௌக்கியங்களைக் கவனித்தாவது பிரித்துவிடலாம். கிராமங்களில் ஒன்றுக் கதிகமாகவாவது அல்லது வேறு கிராமங்கள் பக்கத்திலிருந்து அவைகளில் சிறு பாடசாலைகள் நடைபெற்று வந்தால் அவைகளையும் சங்கியை சென்ட்ரல் ஸ்கூலாக நடத்த லாயக்கு, அவ்வாறு நடத்த ஜவாப்தாரியாக ஒப்புக்கொள்ளுதல் முதலிய காரணங்களைக் கொண்டு வகைபிரித்துக் சங்கியை குறைவாக யிருக்கும் வகுப்புகளின் மாணவர்களைச் சென்ட்ரல் ஸ்கூலுக்கு மாற்ற ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்ட்ரல், ஜூனியர் என்னும் பிரிவை ஒப்புக்கொண்டால் சிறிய பாடசாலைகள் மூடப்பட வேண்டியிருக்கும். அவ்வாறு மூடப்படுபவை பெரும்பாலும் உபாத்தியாயர்களே மானேஜராயிருந்து நடத்திவரும் பள்ளிக்கூடங்களென்று பயம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் அப்பேர்ப்பட்ட மானேஜர்களுக்கு 5-வது வகுப்பு முடிய நூதன ஏற்பாட்டின்படி நடத்தப் பண உதவியும் இதர சௌகர்யங்களும் கிடைக்காதென்றும், மேல் வகுப்புகளின் பிள்ளைகளை சென்ட்

ரல் ஸ்கூலுக்கு அனுப்பிவிட்டால், கீழ் வகுப்புகள் மட்டும் வைத்து நடத்தவேண்டியிருப்பதால் சம்பளம் போதிய அளவு கிடைக்காதென்றும் கீழ் வகுப்புகளை மட்டும் போதிப்பதில் உபாத்தியாயர்களின் மதிப்புக் குறைந்துவிடும் என்றும் ஆக்ஷேபணை உலாவிவருகிறது.

சாம்பியன் ஸ்கீமுக்கு வேறு ஆக்ஷேபணைகளையும் செய்கிறார்கள். பெண்கள் ஆண்களின் பாடசாலையில் படிக்கவும், ஸ்திரீகள் புருஷர்களிருக்கும் பாடசாலைகளில் உபாத்திமைத் தொழிலைச் செய்வதும் நம் தேச வழக்கத்திற்கும் தற்போதுள்ள நிலைமைக்கும் மாறானதென்றும் இம்மாதிரி மாறுதல், திடீரென எல்லாச் சம்பிரதாயங்களையும் புறக்கணிக்கச் செய்யுமென்றும் சொல்லப்படுகிறது.

கிறிஸ்தவ சங்கத்தார் நடத்திவரும் பாடசாலைகளில் கத்தோலிக் வகையினர் மதசம்பந்தமான காரணங்களினால் இதர பாடசாலைகளில் படிக்க அவர்கள் குழந்தைகளுக்கு ஒவ்வாதென்றும் ஆக்ஷேபணை செய்யப்படுகிறது. மற்றபடியும் மேல் வகுப்புகளை இதுவரைப் பல வித சிரமத்துடன் நடத்திவந்தால் அவ்வளவும் வீணாவதோடு, அச்சங்க நோக்கத்திற்கும் விரோதம் ஏற்படும் என்றும் சொல்லப்படுகிறது.

மஹம்மதியர்களும் தங்கள் பிள்ளைகளைப் பொதுவானபாடசாலைகளுக் கனுப்புவதால் தங்கள் மத சம்பந்தமான நடவடிக்கை, நாகரீகம் முதலியவைகளுக்குக் கெடுதியென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

சாம்பியன் ஸ்கீம் அனுஷ்டிக்கப்படுவதால் வகுப்புகள் நிறைந்து போதனை நடத்தப்பட்டாலும் சிறிய பாடசாலைகள் எடுக்கப்பட்டு அநேகமாய் முனிசிபாலிடி அல்லது ஜில்லா போர்டாரால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு மாணவர்கள் போவதால் அங்கு நூதனமாக உபாத்தியாயர்கள் நியமிக்க நேரிடுமென்றும் அவர்களுக்குரிய சம்பள விஷயமாய் அதிகச் செலவு ஏற்படுமென்றும் பொதுஜனங்களின் ஆதரவில் நடைபெற்ற பாடசாலைகள் கெடுமென்றும் அதனால் சர்க்கார் செலவில் குறைவு ஏற்படுமென்று எதிர்பார்க்கத் தக்கதல்லவென்றும் சொல்லப்படுகிறது.

மேற்சொன்னமாதிரி வேறு சில ஆக்ஷேபணைகளும் சொல்லப்படுகின்றன. ஸ்தல ஸ்தாபனங்களின் அபிப்பிராயங்களையும் தெரிவிக்க அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது ஜனங்களும்



இவ் வேற்பாட்டின் சாதக பாதகங்களை ஆலோசித்து வருகிறார்கள். ஆனால் சிலர் இதை அடிப்படையாக ஒழிப்பதே முறையென்றும் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். எவ்விதமான சீர்திருத்தமும் ஒருவருக்கும் சிறிதளவாவது பாதகப்படுத்தாமலிருக்க முடியாது. ஆனால் பெரும்பான்மையான அளவில் நன்மையிருக்கின்றதாவென்று பரிசோதிப்பது அவசியம். எப்படியும் நம் நாட்டின் கல்வி யாதொரு மாறுதலும் வேண்டாதபடி அதன் தற்கால நிலைமை முற்றிலும் சிறந்ததுதானா வென்றும் ஆலோசிக்கவேண்டும். (பாரதி.)

## குறிப்பு.

இவ்வளவு ஆக்ஷேபணைகளும் அபிப்பிராய பேதங்களும் உள்ள இச்சாம்பியன் திட்டத்தை முதலில் ஒரு ஜில்லாவில் அமுலுக்கு கொண்டுவந்து, அதன் சாதக பாதகங்களை நன்றாக பரிசீலனை செய்த பிறகுதான் இதர ஜில்லாக்களில் இத்திட்டத்தை கூடுமானால் அமுலுக்கு கொண்டுவருவது சரியான முறை

## சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

நமது பத்திரிகையின் இரண்டாவது வருடத்திய சந்தாவை அதாவது (ஏப்ரல் 1934 முதல் மார்ச்சு 1935 வரை) தயவு செய்து மணியார்டர் மூலம் சீக்கிரம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். வி. பி. இல் அனுப்புவதென்றால் இருபாலருக்கும் பல வகையிலும் நஷ்ட்டம் ஏற்படுகிறது. மணியார்டர்கள் அனுப்பும்பொழுதும், கடிதங்கள் எழுதும் பொழுதும் தங்கள் சந்தா நம்பர்களை தயவு செய்து குறித்தனுப்பவும். அப்படி நம்பர்கள் ஞாபகத்தில் இராவிடில் பழைய சந்தா தாரரா, புதிய சந்தா தாரரா என்பதையாவது குறித்து எழுதவும். மானேஜர்.

## சங்கக் காரியதரிசிகளுக்கு ஓர் வேண்டுகோள்:

பல சங்கக் காரியதரிசிகள சங்கக் குறிப்புகளை அதிகமாக எழுதியனுப்பிவிட்டு பிறகு இதைப் போடவில்லை அது விடுபட்டுவிட்டது என்பதாக கடிதங்கள் எழுதுகின்றனர். உண்மைக் கூருமிடத்து சங்கக் குறிப்புகளை அனுப்பித்தபடியே போடுவோமானால் அக்குறிப்புகளே ஒரு பத்திரிகையாக முடியும். ஆதலின் குறிப்புக்களை சுருக்கி விட நேரிடுகின்றது. முக்கியமாக அனுப்பிக்க வேண்டியது. இன்னார் அக்கிராசனம் வகித்தார். இன்ன விஷயத்தைப்பற்றி இன்னார் பேசினார். இந்த விதமாக முக்கிய தீர்மானங்கள் தீர்மானிக்கப் பட்டன என்பதாக கூடுமான வரையில் சுருக்கி எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். பத்திராதிபர்.

# கமலாபாய் கடிதங்கள்

[ஸ்ரீமதி பாப்பம்மாள் - கடலூர்.]

என் அருமை ஸரஸா,

ஏன் இத்தனை நாட்களாக கடிதம் எழுதவில்லை? ஒருசமயம்பரீட்சைக்கு வாசிப்பதில் என்னை சற்று மறந்தனைபோலும். இருக்கட்டும் சென்றவாரம் நீ மதுரையில் ஆரம்பா சிரியர்கள் மகாநாட்டில் நிகழ்த்திய ஓர் சொற்பொழிவை கேற்று எனக்கு மங்களம் காட்டினாள். அதைப்பார்க்கயானும் அவளும் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. ஆனால் நீபேசிய பிரசங்கத்தின் தலையங்கத்தைக் காண என்மனம் சற்று திடுக்கிட்டது. என்ன ஆசிரியர்களாவது அடிமைத்தனமாவது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. 144வது சட்டமென்றால் ஓடி ஒளிந்து கொள்ளும் தியாக வீரர்களடங்கிய நமது தமிழ் நாட்டில் ஓர் பெண்மணி பல ஆரம்பா சிரியர்களும், பட்டதாரிகளும் பலகல்வி கேள்விகளில் தேர்ந்த பிரமுகர்களும். அரசாங்க கல்வியதிகாரிகளும் சூழ்ந்த ஒரு மகாநாட்டில், ஆசிரியர்களின் அரியாமையையும், அவர்களது குற்றங்களையும், ஆரம்பக் கல்வியினிடத்து அரசாங்கத்திற்குள்ள மனப் பான்மையையும், இவ்வளவு பகிரங்கமாக பிரித்தும், கண்டித்தும், பேசியது, உனது மனோ தைர்யத்தையும், தாய் நாட்டினிடத்திலுள்ள தேசபக்தியும், ஆரம்பக் கல்வியினிடத்தும் ஆரம்பாசிரிய களிடத்தும் உனக்குள்ள அபிமானத்தையும் நன்கு விளங்குகின்றது.

உன் பிரசங்கத்தை யொட்டி சென்னையில் பலதமிழ் ஆங்கில பத்திரிகைகள் பிரமாதமாக எழுத ஆரம்பித்து விட்டன. ஆயினும் உன் பிரசங்கத்தில் எனக்கு பல சந்தேகங்களும் அபிப்பிராய பேதங்களும், குறைபாடுகளும், காணப்படுகின்றன. என் அன்புமிக்க சரஸா அவைகளை நான் எடுத்துக்காட்டும் பொழுது என்மீது கோபித்து கொள்ளாதே. பிழைகளிருப்பின் திருத்திக்காட்டு இல்லையேல் நான் எடுத்துக் காட்டுபவையை ஒத்துக்கள்.

முதலில் பிரசங்கத்தை ஆரம்பித்தபொழுது தற்கால ஆரம்பாசிரியர்களுக்கு தைர்ய மென்பதே மருந்துக்கும் கிடையாது உலக விஷயங்களை அறிந்து கொள்ளாமல் அடிமை வாழ்வில் மூழ்கி நிற்கின்றனர்: என்றனை. திக்கற்ற ஆரம்பாசிரியர்களை படித்த



பெண்ணாகிய நீயுங்கூடவா பொதுக்கூட்டத்தில் ஏளனமாக பேச வேண்டும். விஷயங்களை யறிந்த நீயே இவ்வாறுபேசினால், படித்ததாக பாவனை கொண்டுள்ள பாமர ஜனங்கள் ஆசிரியர்களைப்பற்றி இழிவாக நினைப்பதில் என்னடி சந்தேகம்? இந்த ஆரம்பாசிரியர்களை சில முனிசிபல் போர்டு தலைவர்கள் படுத்தும்பாடும், சில கல்வியதிகாரிகள் மிரட்டும் மிரட்டல்களும் உனக்கென்னடி தெரியும். அழகாக மேடைமீது பேசிவிட்டால் போதுமா. உள் நுழைந்து பார்த்தாலல்லவோ அவர்கள் படும்பாடு உனக்குத் தெரியும். அவர்கள் அடிமைகளல்ல வாயில்லா பூச்சிகள். சென்ற வாரம் திருச்சியில் ஓர் ஆரம்பாசிரியர்கள் கூட்டத்தில் யான் தலைமை வகித்தேன். சுமார் ஒருமணி நேரம் கூட்டம் நடந்தது, ஒருவராவது வாய் திறக்கவில்லை. தமயந்தி சுயம்வரத்தில் அரசர்கள் தங்களுக்கு மாலை சூட்டுவாள் என்ற எண்ணத்துடன் பதுமைகளைப்போல் அப்படி இப்படி அசையாமல் இருந்தனர்களாம். அதுபோல ஆசிரியர்கள் நிர்ச்சந்தடியாக உட்கார்ந்திருந்தனர். முதலில் காரியதரிசி முன் கூட்டத்தின் நடவடிக்கையை வாசித்தார். பிறகு ஒரு ஆசிரியர் பெண் கல்வியைப்பற்றி யேதோ சிலவற்றை எழுதிக்கொண்டு வந்து வாசித்தார். ஒரு உபாத்தியாயர் மாதிரிப் பாடம் நடத்தினார். கடைசியில் எனது நண்பர் கல்வியதிகாரி யொருவர், சேம்பியன்ஸ்கீம் என்னும் விஷயமாக தன் அக்குளிலிருந்த ஒருகட்டை எடுத்து பிரமாதமாக பெருக்கியும் ‘கூட்டியும், அந்தஸ்கீமை ஆமோதித்தும் பேசினார். அவர் முடித்ததும் நான் எழுந்திருந்து உங்கள் அபிப்பிராயத்தை இந்தஸ்கீமுக்கு ஸாதகமாக பாதகமாகவோ பகிரங்கமாக தெரியபடுத்தலா மென்பதாக பன்முறைக்கேட்டுக் கொண்டேன். ஒருவராவது இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. டிப்டி இன்ஸ்பெக்டர்களைக் கண்டால் முக்கியமாக் கிராமாந்திரங்களில் ஆசிரியர்களுக்கிருக்கும் முழுபலமும் அரைபலமாகி விடுகிறது. பெட்டியில் அடங்கின பாம்பைப்போல் வாய்பொத்திறந்து விடுகிறார்கள். இந்த விதமாக டிப்டி இன்ஸ்பெக்டர்களும் இதர கல்வியதிகாரிகளும், இவ்வுபாத்திமைச் சங்கங்களையும் அதன் அங்கத்தினர்களையும் அடக்கி ஆள்வதாக தெரிகிறது அதிகாரிகளின் அபிப்பிராயத்திற்கு மாறுக பேசிவிட்டால் அவ்வாசிரியனை எவ்வழியிலாவது கெடுக்க முயல்கின்றனர். திக்கற்ற ஆசிரியர்கள் வாய்பொத்தி கைகட்டி நில்லாது என் செய்யக்கூடும். இவ்விதம் தாழ்ந்த நிலையில் ஆசிரியெர்கள் இருப்பதற்கு கல்வி யதிகாரிகள் அல்லவோ காரணம். வீண்பழியை ஆசிரியர்களின்மீது சுமத்தினால் என்னடி பிரயோஜனம்.

இன்னும் எத்தனையோ இதுபோன்ற குறைபாடுகள் கல்வியதிகாரிகளிடத்திலிருக்கின்றன. முதலில் இவர்கள் மனப்பான்மையையும், நோக்கத்தையும் சீர்திருத்த வேண்டும். அடுத்தகடிதத்தில் எனக்கு ஒழிந்தபொழுது இவைகளைப்பற்றி விஸ்தாரமாக எழுதுகின்றேன்.

இப்படிக்கு,
அன்புமிக்க.
கமலாபாய்.

---

## ஆன்றோர்களின் அறிய மொழிகள்.

[பாரதி]

செயல் செய்வதே உங்களின் பெரிய நோக்கமாக இருக்கட்டும். யோசனை, சங்கற்பம், தியானம் அன்னியில் எந்தச் செயலையும் செய்ய வேண்டாம். சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கும் வேதாந்தத்தை அடியோடு ஒழியுங்கள்.

* * * *

உங்கள் தேசத்தை நேசியுங்கள். உங்கள் முன்னோர்கள் தூங்கும் நாடு. உங்கள் முன்னேற்றத்திற்காகக் கடவுளால் உங்களுக்கு அளிக்கப்பட்ட நாடு. ஆகையால் தேசத்தை மேன்மை அடையச் செய்வது உங்கள் கடமை.

* * * *

புரோகிதர்கள் கடவுள் பெயரை கடைச் சாமான்கள் போன்று அடிக்கடி விலை கூறி விற்பனை செய்கிறார்கள். வன்மை யுள்ளவனுக்குப் புரோகிதர்க்ள் அஞ்சுகிறார்கள்.

* * * *

கடவுள் எல்லா ஜனங்களுக்கும் பொதுவானவர். ஒரு ஜாதிக்காக பிரத்தியேகமாகக் கடவுளில்லை.

* * * *

நம் தேசத்துச் சிறுவர் சிறுமியர் பலரும் மேல்காட்டினரைப் போல் நடை உடை பாவனைகளை அனுஷ்டிக்க விரும்புகிறார்களே யன்றி, அவர்களைப் போலக் கல்வியும் அறிவும் நமக்கு வேண்டுமென்பதைக் கவனிப்பதில்லை.

* * * *

உன் ஜீவியத்தின் முதற் படியிலே ஒப்பற்ற தீர்மானங்களைக் கொள். உன் காரியம் ஆகும்வரையில் உழைத்துக்கொண்டிரு. வெற்றி உனக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்,

# சைவ சமயம்

திரு, எம். பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்., சென்னை.

(முன் தொடர்ச்சி)

உயிர் அல்லது ஆன்மா :—உயிர், கடவுளைப்போலவே ஆதியும் அந்தமுமில்லாத பொருள். கடவுள் உயிர்களை உண்டாக்குவதில்லை; உடம்புகளையும் மற்றவைகளையுமே உண்டாக்குகிறார். உயிர் பிராண வாயு, அறிவுகள், புலன்கள், காணங்கள் முதலியவற்றிற்கு வேறாகவுள்ள பொருள். மேற்கூறியவைகளெல்லாம் கருவிகள் அல்லது தத்துவங்கள் எனப்படும். உள் நிலைக்கருவிகள் முப்பத்தாறுக்கும் தத்துவங்கள், புற நிலைக்கருவிகள் அறுபதுக்கும் தாத்விகங்கள் என்று பெயர். இரண்டையும் சேர்த்துப் பொதுவாகத் தொண்ணூற்ராறு தத்துவங்கள் என்று சாதாரணமாகச் சொல்வதுண்டு. இந்த தத்துவங்களை யறிந்து அவற்றிற்கு வேறாக உயிர் நிற்கவேண்டும். இந்த விவரங்களெல்லாம் கட்டளை நூல்களில் கிடைக்கும். ஜாக்கிரதை, ஸ்வப்னம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம் என்று ஐந்து அவஸ்தைகளும் ஆன்மாவுக்கு உண்டு. இவற்றுள் கீழால வஸ்தை, கேவலா வஸ்தை, சகலாவஸ்தை, சுத்தாவஸ்தை, காரணாவஸ்தை, காரியாவஸ்தை என்ற பாகுபாடுகளும் உண்டு. இவைகளைக் கட்டளை நூல்கள் விரிவாகக் கூறும். உயிர்கள் விஞ்ஞானசலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். ஆணவம் என்ற ஒரு மல முடையார் விஞ்ஞான சலர், ஆணவம் கன்மம் என்ற இருமல முடையார் பிரளயாகலர், ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலமுடையார் சகலர்.

ஆன்மா சதசத்து:—செம்பில்களிம்பு இருப்பதுபோல் இயல்பாகவே உயிரில் பாசம் இருக்கிறது. உலகத்தைச் சார்ந்துள்ளபோது பாசம் விலகும். இவ்விரு தன்மையாகவும் உயிர் இருப்பதால் இதற்கு சதசத்து என்று பெயர். அதாவது அசத்தாகிய உலகத்தைச் சார்ந்தால் அசத்தாகவும் சத்தாகிய கடவுளைச் சார்ந்தால் சத்தாகவும் ஆன்மா விளங்குவதால் சத்—அசத்து—சதசத்து என்று ஆன்மாவுக்குப் பெயர் ஏற்பட்டது. இம்மட்டில் உயிர்களைப்பற்றிய ஆராய்ச்சியை நிறுத்திக் கொண்டு இனிப்பாசத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

பாசம் (மலம், உலகம்) :—பாசம் என்பது உயிர்களைக் கட்டிக் கடவுளையும் பேரின்பத்தையும் அடைய வொட்டாது குறுக்கே நிற்கும் தடைப்பொருள். இதை ஐந்து கூறுக்கி ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை என்ற ஐந்து மலங்களென்றும்

கடைசி மூன்றையும் மாயை என்ற ஒரு கூற்றில் அடக்கி, மும்மலங்களென்றும் கூறுவது வழக்கம். இம் மும்மலங்களுக்கும் மூல காரணமாகவும் ஒழிப்பதற்கு மிகவும் கஷ்ட சாத்தியமாகவும் உள்ளது ஆணவமலம். ஆகையால் இதையே மூலமலம் என்றும் பொதுவாக மலம் என்றும் கூறுவதும் வழக்கம். இனி இம்மலங்களாகிய பாசத்தின் தொழிலைக் கவனிப்போம்.

பாசத்தின் தொழில்:—சுத்தமாயை விஞ்ஞான பிரளயாகலர்க்கு தநுகரண புவன போகங்களாயிருக்கும். தநுஎன்றால் உடம்பு, கரணம் என்றால் உடம்புக்கேற்ற இந்திரிய முதலிய சாதனங்கள், புவனம் என்றால் உலகம், போகம் என்றால் உடம்பால் செய்யப்படும் தொழில். இவ்வாறே அசுத்தமாயை சகலர்க்கு தநு கரண புவன போகங்களாயிருக்கும். திரோதாயி இவைகளிலேயே ஆன்மாவை அழுந்தியிருக்கும்படி மயக்கும். கன்மம் ஆன்மாக்களுக்குப் பிறப்பு இறப்புக்களுக்குக் காரணமாயிருக்கும். நல்வினை தீவினைகளுக்கேற்ப தநுகரண புவனபோகங்கள் நல்லனவாகவும் தீயனவாகவும் கிடைக்கும். நல்வினையும் தீவினைப்போல் பிறவிக்கே காரணமாகும். இன்பமும் துன்பத்தைப்போல் பர்தத்தைத் தருமேயொழிய விடுதலையைத் தராது. ஆணவமலம் "நான், எனது" என்ற பற்றுக்களாகின்று மேலும் மேலும் வினையைச் செய்யும்படி ஆன்மாக்களைத் தூண்டும்.

மறுபிறப்புண்மை:—இப்பலங்களெல்லாம் தாமாக வேலை செய்ய மாட்டா கடவுளின் ஆணையே இவைகளைச் செலுத்தும். கடவுளே பழைய வினைக்குத் தக்க அளவாக ஒவ்வொரு உயிருக்கும் அவ்வப்போது தகுந்த தநுகரணாதிகளைத் தருகிறார். ஒவ்வொரு பிறவியிலும் உயிர்கள் தேடிக்கொள்ளும் வினையும் பழைய மூட்டையில் சேரும். இவ்வாறே ஒவ்வொரு உயிருக்கும் பிறவிகள் கடலின் அலைகள் போல ஓயாது வந்துகொண்டேயிருக்கும். எனவே கர்மவுண்மை மறுபிறப்புண்மை யென்பன சைவத்துக்கு உடன்பாடே

தண்டனையும் கருணைச் செயலே:—குழந்தையின் மீது எவ்வளவு ஆசை மிகுதியாயிருந்தாலும் தகப்பன் அக்குழந்தை ஒரு தீங்கு செய்தால் அதை அடித்துத் துரத்துவான். அவ்வாறு அடிப்பது அவனது ஆசை குறைவினாலல்ல. மேலும் மேலும் தீங்கு செய்யாமல் தடுத்துக் குழந்தையைத் திருத்தவேண்டுமென்ற நல்லெண்ணமே அவன் அடிப்பதற்குக் காரணம். அதைப் போலவே நமது



தீவினைக் கேற்ற துன்பங்களை நமக்குக் கடவுள் தருவதால் அவருடைய காருண்யத்துக்குக் குறைவு ஏற்படாது. காருண்யத்துக் கழகு தீவினைக்காக உயிர்களைத் தண்டித்துத் திருத்துதலேயாம். இவ்வாறே இறப்பும் கருணையின் காரியமே. இவ்வுலகத்தில் இறப்பே இல்லை பிறப்புமட்டும் உண்டு என்றால், நாம் நிற்க இடமும் மூச்சுவிடக் காற்றும் இல்லாமல் போய் விடுமல்லவா? ஒரு வாழ்க்கையினால் வரும் கஷ்டங்களை யொழித்து இளைப்பாறுதல் வேண்டாமா? ஆகையால் தான் "அழிப்பு இளைப்பாற்றல்" என்று சைவ சமயம் கூறுகின்றது.

உயிர் பாசத்தை நீக்கும் வழிகள்:— இது வரையில் பதிபசு பாசங்களின் உண்மையையும் இலக்ஷணங்களையும் கண்டோம். இனிப் பசு, பாசத்தை நீக்கி பதியையடைவதற்குரிய சாதனங்களையும் அவற்றால் வரும் பயனையும் கவனிப்போம். மாயையின் சேஷ்டையால் உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணி ஆணவத்தின் சேஷ்டையால் "நான், எனது" என்ற பற்றுக்களை வளர்த்து, கர்மத்தின் சேஷ்டையால் ஆன்மா நல்வினை தீவினைகளைப் புரிவதால்தான் பாசம் ஆன்மாவைக் கட்டியிருக்கிறதென்று மேலே கண்டோம். எனவே பாசக்கட்டு ஒழிய வேண்டுமானால் இம்மூன்று சேஷ்டைகளையும் ஒழிக்க வேண்டும். அதாவது உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணக்கூடாது, நான் எனது என்ற பற்றுக்களை வளர்க்கக் கூடாது, அவற்றின் காரணமாக நல்வினை தீவினைகளைச் செய்யக்கூடாது. இவைகளைச் செய்யக்கூடாது என்றால் வேறு என்னதான் செய்வது என்ற கேள்வி உண்டாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு அந்தக்கரணங்களும் ஓய்வெடுத்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. ஆகையால் இவைகளுக்கு வேறு வேலை கொடுக்கவேண்டும். அதுதான் கடவுளைப்பற்றிய வேலை. மனம் ஒரு குரங்குபோல ஏதாவது ஒரு கிளையைப் பிடித்துக்கொண்டேயிருக்கும். இதைப் பற்றுக்கோடு என்று சொல்லுவார்கள். உலகம் மனதுக்கு ஒரு பற்றுக்கோடு. இதை விட்டால் மனதுக்கு வேறு ஒரு பற்றுக்கோடு தேவை. அதுதான் கடவுள் என்ற பற்றுக் கோடு. இவ்வாறே மற்ற மூன்று அந்தக்கரணங்களின் தொழிலும் இருக்கும். ஆகையால் உலகத்துக்குப்பதிலாகக் கடவுளைவைத்து ஆன்மா தனதுவேலைகளை யெல்லாம் செய்வதுதான் பாசக்கட்டை ஒழிப்பதற்கு உபாயமாகின்றது. இந்த உபாயம் நான்கு படிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு உட்பிரிவுகள் உள்ளன. இந்த சாதன முறைகளில் செல்வதற்கு முன் சமயப் பிரவேசம் என்ற ஒரு சடங்கு இருக்கிறது. அதற்கு தீக்ஷை அல்லது கண்திறத்தல் என்று பெயர். அதாவது ஞானக்கண் அல்லது சமயக் கண்ணைத் திறக்க வைத்தலாகும். (தொடரும்)

# ஆரம்பக் கல்வி விருத்தி யடைய வேண்டுமா? அதிகாரிகள் என்ன செய்யவேண்டும்?

(பி. பரிமணப்பல்லவராயர்)

ஆரம்பக் கல்வி விருத்தியடைய வேண்டுமானால் - நம் மக்களிடையே நல்ல கல்வி விருத்தியடைய வேண்டுமானால் - அது பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால், பயனுள்ளதாக ஆகவேண்டுமானால், பள்ளிக்கூடமென்றால்—உபாத்தியாயரென்றால் பிள்ளைகள் ஓடி ஒளியாமல் ஆவலாய்ப் பள்ளிக்கூடம் வரவேண்டுமானால்-படிக்க விருப்பமுள்ளவர்களா யிருக்கவேண்டுமானால்—படித்துக் கொள்ள வேண்டுமானால் - அதனால் பயனடைய வேண்டுமானால் ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய அமர்ந்துள்ள ஆரம்பாசிரியர்கள் கிண்டர் கார்டன் முறையை - மாண்டிசோரி அம்மையாரின் முறையை மேற்கொள்ளல் வேண்டும்—அதனைச் செயலில் அநுசரித்துவரல் வேண்டும் என்பது யாவரும் அறிந்தது.

மாணவர்கள் தங்கள் படிப்பு ஏட்டுப்படிப்பாயிராமல் அநுபவப் படிப்பாயும் மனோ விருத்திக்கேற்ற பொது அறிவுப்படிப்பும் படித்தல் வேண்டும் ஆசிரியர்கள் படிப்பித்தல் வேண்டும் என்ற நியதியும் ஏற்பட்டிருத்தலும் யாவரும் அறிந்தது. எதுவும், "சட்டியிலிருந்தால் தான் அகப்பையில் வரும்" ஆதலால், ஆசிரியர் சட்டியைப் போன்று ஏராளமான பொது அறிவைத் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும். எவ்விதம் கொண்டிருக்க முடியும்? ஜீவப்பிராணிகள் தத்தம் வயிறு பூரணமாயிருக்க ஆகாராதிகளை உட்கொள்ளல் அவசியம் போல, ஆசிரியரும் தமக்குரிய பொது அறிவு உணவை உண்டுவரல் வேண்டும். இந்தப் பொது அறிவு உணவானது எந்த நிலத்திலே இனிது முளைத்துத் தளிர்த்து செழித்து இருக்கிறது எனின், அது பத்திரிகை நிலத்திலே தான் என்பது எவரும் அறிந்திருக்கக் கூடியதாகும். ஆசிரியர்களோ இந்தப் பத்திரிகை நிலத்தைத் தேடித் தமக்கு வசியமான உலகப் பொது அறிவை உண்ணுவோர் நம் நாட்டில் நூற்றுக்கு அல்லது ஆயிரத்துக்கு எத்தனை பேர் இருப்பர்? ஏன் ஒரு சென்டர் சங்கத்தை எடுத்துக் கொண்டு பாருங்கள்! கரதலாமலகம்போல—உள்ளங்கை நெல்லிக்கனிபோல—பளிங்கு போல—வெள்ளிடை மலையெனத் தெரிந்துவிடும்.

இங்கு, சட்டியில்லாத போது அகப்பையில் எங்கிருந்து வரும்? அகப்பையிலிருந்து உண் கலத்துக்கு எங்கிருந்துவரும்? உண்



கலத்திலிருந்து கைக்கு எங்கிருந்துவரும்? கையிலிருந்து வாய்க்கு எங்குவரும்? வாயிலிருந்து வயிற்றுக்கு எங்குவரும்? வயிற்றிலிருந்து ஜீரணமாகி அது இரத்தாசயத்திற்கும் அறிவின் இருப்பிடமாகிய மூளைக்கும் எங்கு போகும்? இவைகளின் மூலம் நம் இளைஞர்களுக்கு பிற்காலப் பிரஜைகளாகப் போகும் நம்மாணவர்களுக்கு எங்கு ஈதல் முடியும்? கற்பிக்கமுடியும்? அவர்கள் கடைத்தேற முடியும்?

சர்க்கார் இதற்காகச் சம்பளமாகவும், கட்டடமாகவும், சாமான்களாகவும், ஆசிரியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் செலவு செய்வது என்ன ஆகிறது? என்ன பிரயோஜனப்படுகிறது? எவ்வளவோ பிரமுகர்கள் ஆரம்பக் கல்விக்குச் செலவழிப்பது நல்லவிதமாக பிரயோஜனப்படவில்லை ஆரம்பக் கல்வி செலவுக்குத் தக்கவாறு அபிவிருத்தி அடையவில்லை என்று வருடா வருடம் பத்திரிகைகளிலும் அறிக்கைகளிலும் பிரசங்கங்களிலும் எழுதவும் வெளியிடவும் பேசவும் செய்கின்றனர் பயன் என்ன? காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்தனரா?

"தொட்டனைத்தூறும் மணற்கேணி—மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு"

என்றார் நம் திருவள்ளுவப் பெருந்தகையார். பெரும்பான்மையான ஆசிரிய மாந்தர்கள் கற்கவேண்டியயாவும் கற்று விட்டோம்-போதனா முறையில் பயிற்சியடைந்து விட்டோம் என்ற எண்ணம் கொண்டிருக்கிற வரையில் அவர்கள் கொண்டுள்ள தொழில் பயனுறுமா? ஒருக்காலும் கிடையாதென்றும் கோபுரத்தின் உச்சியிலிருந்துங் கூடக் கூறலாம். இவ்வித குறையை அகற்ற எண்ணாது ஒவ்வொரு மாதமும் மீட்டிங்கு கூடி ஒரு மாதிரிப் பாடமும் ஏதோ ஒரு வியாசமும் நடத்திப்படித்துவிட்டால் போதுமா? ஆசிரியரின் அறிவு விருத்தியடைந்துவிடுமா? ஒரு கூட்டத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிய வியாசத்தில் எத்தனைபேர் கருத்துகொண்டு யோசித்து எழுதி வந்தாவது படிப்பவர் இருக்கக்கூடும்? மிகச் சொற்பமே மாணவர்களைக் கதைகள் சொல்லச் செய்வதன் மூலம் பேசப்பழக்கும் ஆசிரியர், தாம் ஒரு கூட்டத்தில் உபாத்தியாயர்களின் கூட்டத்திலாவது நன்கு பேசப் பயின்றிருக்க வேண்டாமா? இக் குறைகளை ஆசிரியர்களும் அதிகாரிகளும் நீக்க முயலாமல் என்னதான் ஏற்பாடுகள் செய்தாலும் அது வீண் பிரயோசனமே யன்றி பிரயோஜனமானதாகாது என்பது உற்றுணர்ந்தோர்க்கு எளிதில் விளங்கக் கூடியதாகும்.

ஆகவே, இக் குறையை எவ்விதம் நீங்கச் செய்தல் வேண்டும் எனலாம்? ஆரம்ப ஆசியர்களுக்காகவும் ஆரம்பக் கல்விக்காகவும் என வெளிவரும் அத்தனை பத்திரிகைகளையும் சங்கத்தில் அவசியம் படித்தல் வேண்டும். இப்பத்திரிகைகளிலுள்ள விஷயங்களை— பொது அறிவுகளைப் படிப்பதே மீட்டிங்கின் வேலைகளில் முக்கியமானதாக இருக்கவேண்டும். வேறு பல பத்திரிகைகளிலுமுள்ள சம்பந்தப்பட்ட விஷயங்களை முழுப் பத்திரிகைகளாகவோ, துண்டுகளாகத் கத்தரித்து எடுத்து வந்தோ மீட்டிங்குகளில் யாவருமறிய வாசித்தல் வேண்டும். இவ்விதம் வாசிப்பவர்களைக் கணக்கெடுத்து வருஷக் கடைசியில் அதிக வாசிப்பாளர்க்கு ஒரு உணர்ச்சி--ஊக்கம் உண்டாக்கத்தக்க நற்சாட்சிப் பத்திரம் (சர்ட்டிபிகேட்) போன்ற ஞாபகார்த்தம் அளித்தல் மூலம் கல்வி சம்பந்தமாக அறிவாளிகள் எழுதும் விஷயங்களைப் படித்துணரச் செய்வதில் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

ஆரம்பக் கல்வி சம்பந்தமாகவும் ஆசிரியர் பயிற்சி சம்பந்தமாகவும் அந்தஸ்து முதலானவை சம்பந்தமாகவும் சர்க்கார் வெளியிடும் சட்டங்களையோ—உத்திரவுகளையோ அறிக்கைகளையோ எத்தனை ஆசிரியர்கள் பத்திரிகைகளின் மூலமாக அறிய முயற்சிக்கின்றனர்? எல்லோரையும் இப்படிப்பட்டவர் என்று சொல்வதற்கில்லையெனினும், இப்படி யல்லாதவர்கள் மிகச் சொற்பந்தானே! இவைகளை அறியாதபடி இருப்பவர்களை அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட குமாஸ்தாக்களும் ஒரு சில தவிர, பலர் ஆசிரியர்களைக் கிணற்றுத் தவளைகளாக இன்னும் பலவிதமாகக் கேவலமாய் மதிப்பதிலும் பேசுவதிலும் மிரட்டுவதிலும் குற்றமென்ன இருக்கிறது? இவ்வித அறியாமையில் ஆழ்ந்திருக்கும் ஆசிரியர்க்குத் திடமனது எங்கிருக்கும்? திடமனமில்லாதவோர் தம் தொழிலைத் திடமாகச் செய்வதெங்ஙனம்? ஏழைக் கும்பிடும் ஊழைக்கும்பிடும் போட்டு அதிகாரிகளை வசப்படுத்துவதிலோ மாற்றுவதிலோ முயற்சிப்பதில் அதிகாரிகளும் இத்தகைய ஆசிரியர்களின் எண்ணத்தை அறிந்து கொள்ளாதிருந்து விடுகின்றனரா? இல்லை என்ன செய்வது? "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" என்றபடி நடந்து கொள்ளவும் நேரிடுகிறது. ஆரம்ப ஆசிரியர்கள் உலகப் பொது அறிவில் ஈடுபட்டவர்களாயின் ஆயிரக்கணக்கானவர்கள் தற்கால நிகழ்ச்சி முறையிலிருக்கும் "எலிமெண்டரி கிரேடு" சர்ட்டிபிகேட் விஷயத்தை இது காறும் கவனியாதிருக்கக்கூடுமா? எவ்வளவோ கஷ்டப்பட்டு ஏற்படுத்திய மாகாண ஆரம்பாசிரியர் சங்கத்தை இருந்த இடம் தெரியாமல் போகவிட்டு விடக் கூடுமா? பிரஸ்தாப சர்ட்டிபிகேட் சம்பந்தமாய் ஏராளமான அபிப்பிராயங்களைப் பத்திரிகைகளில்-முயற்சிக்காமலிருக்கக் கூடுமா? ஸ்ரீமான் மெத்துசலா போன்ற மகாநாட்டு முயற்சியாளர்களும் "ஆரம்பக் கல்வி" பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் வீரராகவன் போன்ற உணர்ச்சியாளர்களும் போல் ஏனையோர்களும் பிரஸ்தாப மகாநாடும் பத்திரிகையும் போன்ற விஷயங்களில் தங்கள் தங்கள் ஊக்கத்தை வளர்த்து முன்னேற்ற மடைந்து ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு ஆதார பூதர்களாய் நிலவுவார்களாக!

பல்லாயிரக்கணக்கான ஆரம்பாசிரியர்களுள்ள இந் நாட்டில் ஆரம்பாசிரியர்களுக்காகவும் ஒரு தினசரிப்பத்திரிகை நடைபெறுகிறதென்றால் அது ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு ஒரு உன்னத அறிகுறியாகும். அஃதின்றி, ஒரு மாதப்பத்திரிகையே ஒழுங்காக நடைபெற முடியவில்லையென்றால் அது ஆரம்ப ஆசிரியர்களினுடையவும் விருத்திக் குறைவையே - பிற்போக்கையே காட்டும் அறிகுறியாகும் என்பதில் ஐயமில்லை. இதனை இனியேனும் அறிஞர்கள் அறிந்து "எழுத்தறி வித்தவன் (கடவுள்) ஆகும்" என்று ஆன்றோர் அருளிய மூதுரையின் பெருமையை நிலை நாட்டத்தக்கவாறு நடந்துறுவார்களென்று பெரிதும் நம்புகின்றோம்.

# கிராம பஞ்சாயத்து போர்டு பாடசாலைகளின் நிலைமை.

(எம். அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் செங்கம் தாலுக்கா)

உலகிலுள்ள எல்லா செல்வங்களிலும் முதன்மையாய் விளங்கக் கூடிய கல்வி செல்வமே, கல்விபயின்று அதனாலடைவது பலவுள. உலகில் அரசர்மிக்க செல்வம் உற்றவராயினும் வறிஞரான கற்றோர்க்கே சிறப்பதிகம். இதனாலன்றோ "மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்" என ஆன்றோர் கூறியுள்ளார். கல்வி சிறப்பை கணிக்க யாராலாகும் ஒரு வகையில் பிரமனிலும் கலை வல்லார் பெருமை பெற்றவராகிறார் "கண்ணுடைய என்பவர் கற்றோர் முகத்திரண்டு. புண்ணுடையர் கல்லாதவர்" என்றதால் கல்லாதார் விழி பெற்றும் குருடராய் முடிவர் கல்லாதார் பகுத்தறிவில்லா மாத்தோடொப்பிடப்படுவர் சுருங்கச் சொல்லின் கல்வியாலடையக் கூடியன, தர்மம், அர்த்தம், காமம் மோட்சம், என்ற நான்கு புருடார்த்தங்

களுமேயாம் இத்தகைய கல்வியை ஆசிரியர் மூலமாய் அடைய வேண்டும் அவ்வாறு கற்கா கல்வியானது,

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்து
உய்த்துணர்வில்லெனி னில்லாகும் - உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னாகு மஃதுண்டேல்
பொன்மலர் நாற்றமுடைத்து.

என்றபடி நன்மையை தாமாட்டா துனதுபற்றி தகுந்த ஆசிரியரை கொண்டு பயிலவேண்டும் அவ்வாறு பயின்ற கல்வி. யறிவு மென்மே லதிகரிக்கும் ஆதலினாலன்றோ நமது இந்தியாவின் முன்னேற்றத்துக்காக தங்களது ஆயுள் நாளை அர்ப்பணம் செய்த தேசபக்தராகிய கனம் கோபால கிருஷ்ண கோகலே என்பவர் தேச முன்னேற்றமடைய வேண்டியதற்கு இன்றியமையாதது கல்வி என்றறிந்து சிறுவர்களுக்கு கல்வி கற்பித்து அவர்களை நன்னெறியில் முன்னுறச் செய்வதே சிறந்த தொழிலென்று அவர் உபாத்திமை தொழிலை தேர்ந்தனர். இப்போதுள்ள சிறியோரே பிற்காலத்தில் பெரியராய் பல நற்பதவிகளை பெறுபவர்களாதலின் அவர்களை நற்குண நற்செய்கைகளில் மேம்படவேண்டுமென்கிற நன்னோக்கத்தினாலேயே, அவர்கள் உபாத்திமை தொழிலை உயர்ந்ததென ஆராய்ந்து அதை பெற்றனர். இத்தகைய மகான்களால் எழிலுற்ற இவ்வாசிரிய பதவியானது, தற்காலம் சீர்கேடடைந்த தானது நாடுசெய்த தீதேயாகும். இதற்கு சான்றாக தற்காலம், நம் சென்னை மாகாணத்தில் எழுத படிக்கத் தெரிந்தவர் நூற்றுக்கு 20 பேர் என கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றன, இக்கணக்கோ கையெழுத்துமட்டும் தெரிந்தால் போதுமென்ற படிப்பின் கணக்கே. இதில் எழுத்துவாசனை அறியாத சிலகிராமங்கள் சிலவுள. அக்கிராமங்கள் எல்லாம் பஞ்சாயத்து நியமிக்கப்பட்டிருக்கின்றன அவையுள்பட இவ்விராஜதானியில் 5000 கிராம பஞ்சாயத்துகளிருக்கின்றன. இவை நடத்தும் பிரஸிடெண்டுகளை தங்கள் பெயரையும் ஹோதாவையும் எழுதென்றால் ''நாரணசமி நாக்கன் பிரஜண்டு என்று வரைகிறார். இத்தகைய மேதாவிகளால் நடக்கும் பஞ்சாயத்து எம்மாதிரி நடக்கும் என்பதை ஒவ்வொருவரும் நன்கு கவனிக்கப்படவேண்டும் இப்பிரஸிடெண்டுகளும் மெம்பர்களும் தங்கள் சுய நலத்திற்கு ஏற்பட்டனவென்று எண்ணி தங்கள் இஷ்டப்படி நடக்கின்றனர் எதற்காக பஞ்சாயத்து ஸ்தாபித்தோம் அதன் வேலைகளென்ன அதற்குடைய விதிகளை நிருபணம் செய்து காருண்ய கவர்ன்



மெண்டார் நம்மிடம் ஒப்படைத்ததின் பயன் என்ன என்பதை அணுவளவும் அறிந்துக் கொள்ளாத இந்திரஜாலகுட்டிகளிடம் ஆரம்பக் கல்வி அபிவிர்த்தியடையுமென்று நாம் எவ்வித ஆதாரத்தைக் கொண்டு சொல்லமுடியும் சகலத்திற்கும் அடிபீடமாயுள்ள ஆரம்பாசிரியர்களை 'மர்க்கடத்தினிடம் மணமாலை கொடுத்தது போல்'' இவர்களிடம் ஒப்புவித்த காரணம் விளங்கவில்லை. இவர்கள் படித்தாக் ஆயராம் கடவுளுக்குத் தான் தெரியுமே அன்றி ஏனையோர் அறியார் தங்களுடைய குஷ்டியாதையை நிவர்த்திக்கும் பொருட்டு இப் பஞ்சாயத்தில் இச் சொற்ப சம்பளத்திற்கு உடன்பட்டு இவ்வாசிரிய தொழிலை செய்துவருகிறார். இதுவும் மாதாமாதம் கொடுபடுவதில்லை. ஆறு மாதத்திற் கொருமுறையோ வருஷத்திற்கொருமுறையோ காருண்ய கவர்ன்மெண்டாரால் சாங்க்ஷன் செய்யப்படுகின்றன. அதுவரை உண்ணாவிரதமே அவ்வமயம் பிரஸிடெண்டை கேட்கில் இவ்வுத்தியோகமே போய்விட்டது அவர் எங்ஙனம் கொடுப்பார் கிராண்டு வந்தவுடன் ''பிச்சை எடுத்தாராம் பெருமாள் அதை பிடுங்கிற்றாம் அனுமார்'' என்றபடி மாதம் ஒன்றுக்கு ரூபா 6, 7, தான் கொடுப்போம் என பேரம்பேச ஆரம்பித்துவிடுகிறார்கள் இவர்கள் தங்கள் பண்ணை ஆள் என நினைத்தனர் போலும், இக் கஷ்ட காலத்தில் தங்களின் பிடியின் கொடிதால் பிள்ளைகளுக்கு படிப்பு வந்தாலென்ன வராவிட்டாலென்ன என்று பொக்கை வாயனுக்கு பொரிமாவு கிடைத்தாப்போல் இம்மேலான தொழிலை இவ்விழிய ஊதியத்திற்கு உடன்படுகிறார்கள் இதில் ஊதியத்திற் கேற்ற ஊழியந்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சில பிரஸிடெண்டுகள் படுத்துந் துன்பத்திற்கு எல்லை யுண்டோ? இவர்கள் ஆட்சிக்குட் பட்டவர் ஆசிரியரே எவருளர் நெற்களம் காவல் காக்கவேண்டும், ஏறப்பு இறைத்து வயல்களுக்கு ஜலம் பாச்ச வேண்டும், சோமன் துவைக்க வேண்டும், கட்குடிகார தலைவராய் இருந்தால் மாலை அவருடன் துணைக்கு செல்ல வேண்டும் இவைகளைச் செய்தும் ஏதோ ஒரு சமயம் இவர் தூர்அதிர்ஷ்டவசமாக மேல்கண்ட தொழிலை செய்யா விட்டாலோ அன்றே இவ் வுபாத்திமை தொழில் போய்விட்டன, இக்காலத்தில் வேறு உபாத்தியாயர் கிடைப்பது என்ன பஞ்சமா ''எமிலேன வாடிகி எடுகேஷனல் டிபார்ட்டு மெண்டு'' என்றபடி வாலண்டரி வேலையாவது கிடைக்குமா என்று ஏங்கிநிற்கின்றனர் இதனால் இப் பிரஸி டெண்டுகள் ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்கிறார் ஒரு வருடத்திற்கு பனிரண்டு ராசி

யில் ஆதித்தன் பிரவேசிப்பது போல ஓராண்டிற்குள் ஒரு பாடசாலையில் பல உபாத்தியாயர்கள் சஞ்சரிக்கின்றனர் அவ்வித பாடசாலைகளுள்ள கிராமங்களில் கல்வியில் எவ்வாறு சீர்படமுடியும்.

ஆதலால் நமது நாடு இதர நாடுகளைப் போல் கல்வி யறிவுடைய மக்கள் நிறைந்த நாடென விளங்கும்படி செய்யவேண்டும். அதை விட்டு இப்பாமர பிரஸிடெண்டுகளுடைய ஆதீனத்தில் ஒப்படைத்ததானது குரங்கு அப்பம் பங்கிட்ட கதைபோல முடியுமே தவிர, எக்காலத்திலும் சீர்படபோவதில்லை அதுவரை கல்விக்கென அளிக்கப்படும் பணம் எல்லாம் விழலுக்கென இறைத்த நீரே ஆகும் ஆகலால் கல்வி சம்மந்தப்பட்டவரையில் உபாத்தியாயர்களை நியமனம் செய்வதும், நீக்குவதும், சம்பள பட்வாடா செய்வது முதலியன யாவும். தற்காலம் நியமனம் செய்யும். கமிஷனர் மேற்பார்வையிலாவது கல்வி அதிகாரிகள் மூல்யமாவது காருண்ய கவர்ன்மெண்டாரும், கனம் கல்வி இலாகா மந்திரி அவர்களும் இதை நன்கு கவனித்து ஒப்படைப்பார்களென நம்புகின்றோம்.

---

## ஆரோக்கிய உயிரெழுத்துக்கள்

‘அ’ என்பது அறியாமை—அதை அறவொழிப்பதே சரியாமே.
‘ஆ’ என்பது ஆரோக்கியம்—அதை அடைவதே பெரும்பாக்கியம்
‘இ’ என்பது இல்லறமாம்—இதுவே நமக்கேற்ற நல்லறமாம்.
‘ஈ’ என்பதோர் கொடும் பூச்சி-அதன் பேச்செடாதே சீச்சி! சீச்சி!!
‘உ’ என்பது உண்டி—அதை அதிகமாயுண்போன் ஓர் சண்டி.
‘ஊ’ என்பது ஊக்கம்—அஃதின்றேல் வரும் வீக்கம்.
‘எ’ என்பது நாம் துப்பும் எச்சில்—அதனால் தொத்தும் காசநோய்க் காய்ச்சல்.
‘ஏ’ என்பது ஏக்கம்—அது பிடித்தோர்க்கு வாராது தூக்கம்
‘ஐ’ என்பது ஐயம்—ஆரோக்கியத்திற்கு அது அழிவு செய்யும்.
‘ஒ’ என்பது ஒதுங்கு—தொத்துநோய் கண்டால் நீ பதுங்கு.
‘ஓ’ என்பது ஆரோக்கிய நூல் ஓது—அதற்கு நம் ‘தீபிகை’யை விட வேறு நூல் எது?
‘ஔ’ என்பது நாம் நோய்க்கருந்தும் இயற்கை ஔடதங்கள்—வாயு, ஊண், வியாயாமம், நீர், ஒளி, நித்திரை இவ்வாறும், அவ்வாறும் ஔடதங்களே.

## ஆரோக்கியக் கணக்குப் பரிசோதனை

எப். எ. ஜாலர், எம். டி., மேரிவில்லா, டென்.

வெகுகாலமாக நாகரீகமுள்ள ஜனங்களுக்குள் ஒருவருக்கொருவர் க்ஷேம விசாரணை செய்துகொள்வது வழக்கம். ஒருவரை ஒருவர் பிரியும்போதும் கைகுலுக்குதலும், ஒருவரை ஒருவர் பார்க்கும்போது கைகூப்புதலும் இதன் அடையாளங்கள். சௌக்கியமா? க்ஷேமமா? என்று கேட்பதும், ஒருவன் மற்றவனுடைய தேகசுகம் மனோசுகம் இவைகளைப்பற்றி விசாரிக்கும் கேள்விகள். ஒருவர் மற்றவருடைய க்ஷேம லாபங்களை விசாரிப்பதில் அவ்வளவு ஆவலாயிருக்கும்போது, தங்கள் க்ஷேமத்தைப்பற்றியே தாங்கள் தெரிந்து கொள்வதில் எவ்வளவு ஆவலாயிருக்கவேண்டும். ஆனால், நாம் என்ன தெரிந்துகொள்கிறோம். நாம் வருஷவாரியோ, அப்போதைக்கப்போதே நமது ஆரோக்கியக் கணக்கைப் பரிசோதித்தாலொழிய, அதை நாம் எப்படி தெரிந்துகொள்வது?

நமது தேகாரோக்கியத்தைச் சரியானபடி வைத்துக்கொள்வதற்கு இரண்டு வழிகள் உண்டு. முதலாவது நமது பெற்றோர்கள் சரியானவர்களா யிருக்கவேண்டும். அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. நமது பெற்றோர்களைப் பொறுக்கி எடுக்கும் இந்த அசாத்தியமான காரியத்தை நாம் செய்வதாயிருந்தால், காசநோய், மேகரணம், பைத்தியம், கிரந்திநோய், தற்கொலை புரியும் எண்ணம் இவை உள்ளவர்களை நமது பெற்றோர்களாகப் பொறுக்கியெடுக்கமாட்டோம், ஏனெனில், அவர்கள் சந்ததியார்க்கும் இக்குணங்கள் உண்டாகும். நமது பெற்றோர்களின் தேகக்கோளாறுகள் தெரியாமலிருக்க, நமக்குச் சில வியாதிகள் காண ஆரம்பித்தால், அவற்றை அசட்டை செய்து, உடனே அவற்றிற்குத் தக்க சிகிச்சை செய்யாதிருக்கும் பக்ஷத்தில், தடுக்கக்கூடிய வியாதி முற்றி, நமக்கு அகால மரணம் சம்பவிக்கும்.

ஓர் மோடார் வண்டி வாங்கினால், அதை அப்போதைக்கப்போது பழுதுபார்க்கிறோமல்லவா? வெகுதூரம் பிரயாணம் செய்வதாயிருந்தால் அதை அவசியம் பழுது பார்க்கிறோம். அப்படிச்செய்வது புத்திசாலித்தனம். நமது வாழ்வைக் காட்டிலும் தூரப்பிரயாணம் ஏது? நமது தேகத்தைக் காட்டிலும் சிக்கலான இயந்திரம் எது? நமது தேகத்தையும் அப்போதைக்கப்போது பழுதுபார்க்க வேண்டிய தவசியம்.

18 வயது முதல் 31 வயதுள்ள அமெரிக்கா தேசத்து யுவர்களில், மூன்றில் ஒன்று, வியாதி முதலிய காரணங்களால் முதல் யுத்

# ஆரோக்கியத் துண்டுத் துணுக்கு.

புத்தகத்தின் பக்கங்களை நக்குதல்.—இப்போது நாம் எப்படி அடிக்கடி இருமுகிறோமோ, அவ்வாறே நாம் எச்சல் துப்புதல் அபாயகாமானதென்று பொதுஜன அபிப்பிராயம் கண்டனம் செய்ய ஆரம்பித்தது. இப்போது, டிராம் முதலிய, பொது ஜனங்களை ஏற்றிக்கொண்டு போகும்படியான வண்டிகளில் ஒருவன் துப்பினால் அவன் மேல் கூடப் பிரயாணம் செய்வோர்க்கு ஒருவிதமான அருவெறுப்பும் அவமதிப்பும் ஏற்படுகிறது. அவனுக்கும் தன்னை அவர்கள் இகழ்ச்சி செய்வதாக ஒருவித உணர்ச்சி உண்டாகிறது. ஆனால், இன்னொரு கெட்ட பழக்கத்தை மட்டும் பொதுஜன அபிப்பிராயம் கண்டனம் செய்யக் காணோம். அது புத்தகத்தின் பக்கங்களை நக்குதலேயாம். படித்தவர்கள் புத்தகங்களின் பக்கங்களைத் தள்ளும்போது. நாக்கினால் நக்கித்தள்ளுகிறார்கள். இவர்கள் செய்யும் குற்றம் எவ்வளவு அபாயமானதென்று அவர்கள் நினைக்கிறாரில்லை. கிருமி சாஸ்திரத்தை அவர்கள் படித்திருந்தால், ஒவ்வொரு நபரின் நாக்கிலும் உயிரோடுள்ள கிருமிகள் நிறைந்திருக்கின்றனவென்று அவர்களுக்குத் தெரியும். இக்கிருமிகள் அந்த நபருக்கு ஒரு கெடுதலையும் செய்யா. ஆனால், அன்னியர் விஷயத்தில் அப்படியல்ல. ஒருவன் விரலை நாக்கில் தொட்டு புத்தகத்தின் பக்கத்தைத் திருப்பினால், நாக்கிலுள்ள கிருமிகள் புத்தகங்களில் வந்து படியும். மற்றொருவன் அந்தப் புத்தகத்தை வாசிக்கும்போது, இக்கிருமிகள் அவன் நாக்கிற்கு மாறுகின்றன. இதே மாதிரி நடந்துகொண்டே வருகிறது. எந்தப் புத்தகம் இம்மாதிரி அதிகமாக நக்கப்படுகிறதோ அந்தப் புத்தகம் விஷக்கிருமி மாற்றுகைக்கு ஒரு மார்க்கெட் ஆகும். அதே மாதிரியே, நக்கி எழுதும் பென்ஸிலும்.—தி ஆஸ்டிரேலியன் ரெட் க்ராஸ்.

---

தப் பரீக்ஷையில் தள்ளப்பட்டனர். இதனால், ஒரு சேனையைத் தயாரிக்க, வயதைக் குறைக்கப்பட்டது. யுத்தப்பரீக்ஷையில் பொதுஜனங்கள் தேரமாட்டார்கள் என்பது திண்ணம்.

"பூர்ண ஆரோக்கியமுள்ளவனுக்கு வைத்தியர் தேவையில்லை. நோயாளிக்குத்தான் வைத்தியர் உதவி வேண்டும்" என்று தடைமுறையே இன்னதென்று தெரியாத ஒரு காலத்தில் எழுதப்பட்டது.

ஆரோக்கியமான வாழ்வு வாழவேண்டுமானால், அப்போதைக்கப்போது தேகத்தைப் பரீக்ஷித்துக்கொண்டு, வருஷவாரி குடும்ப வைத்தியரைக்கொண்டு ஆரோக்கியக் கணக்கைப் பரிசோதனை செய்யவேண்டும்.—தி மெடிகல் வொரல்டு.

# உதய குமாரன்

(வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்)

## ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன்தொடர்ச்சி)

*பதுமுகன் வந்து திண்ணையில் உட்காருதல்.*

பதுமுகன்:—அப்பா என்ன இளைப்பாயிருக்கின்றது. என்ன கண்கள் இருளுகின்றன காதுகள் அலடர்கின்றன. இவ்வளவு துக்கத்தில் கூட பசியும் உயிரை வாட்டுகின்றதே. இவ்விடத்தில் ஏதாவது நீராகாரமாயினும் கிடைக்குமா. (வைரமணிச் செட்டி வெளியே வருதல்).

வைரமணி:—அப்பா! பதுமுகா! எப்படி நீயும் இவ்விடம் வந்தது. என்ன நின்முகம் மிகவும் வாட்டமுற்றிருக்கின்றது? உன் நண்பன் எங்கே? அவனுக்கு ஏது நிகழ்ந்தது?

பதுமுகன்:—எல்லாம் நல்லதே. * தெய்வ சங்கல்பமதுவானால் அதைத் தடுக்க நம்மாலாவதோ. மேலும் இப்பிறப்பிற் சம்பவிப்பவனைத்தும் முப்பிறப்பிற் செய்த தீவினையின் பயனே யன்றோ அத்தீவினைப் பயனைத் தடுக்க நம்மாலாவதோ.

வைரமணி:—அப்பா! தம்பி நீ கூறுவதனைத்தையும் உற்று உன்னுங்கால் என் அருமைக் குமாரன் சீவோதயனுக்கு ஏதோ நேரிட்டது போல் தோற்றுகின்றது. நடந்ததென்ன? அறியவுரைப்பாய்.

பதுமுகன்.—தங்களுக்கென்ன விதமான தீங்கு நேரிட்ட போதிலும் தங்களாலென்ன முடியும்?

வைரமணி:—அப்பா! அதென்ன அப்படிச் சொல்லுகின்றாய். நடந்ததென்ன? சீக்கிரம் உரைப்பாய்.?

பதுமுகன்:—ஆ! தெய்வமே! நான் என்ன சொல்வது! மரணச்செய்தியைச் சொல்லவா நான் தோன்றினேன். (என்று சும்மாவிருத்தல்.

வைரமணி:—அப்பா! உனக்கென்ன கேடு சம்பவித்தடா? இந்த அவதிக்குத்தானா இத்தனைக் காலம் வளர்த்துவந்தேன். இந்த அவதிக்கா மயானத்துக் கிடந்த நின்னை எடுத்து வந்தேன். பிள்ளையற்ற பெரும்பாவியாயிருந்துப் நின்னைப் பெற்று

வது கடைத்தேருவனென்றிருந்தேனே. அவ்வெண்ணமும் அவலமாயிற்றே. என் செய்கேன். என்மகனே (எனப் புலம்புதல்) சயிந்தையும் சிந்தாமணியும் வெளியே வருதல்)

சயிந்தை:—செய்தியாது?

சிந்தாமணி:—என்ன சங்கதி! என்ன சங்கதி?

பதுமுகம்:—எல்லாம் நல்ல செய்தியே. சீவோதயனை அரசன் கட்டளைப்படி மயானம் அழைத்துச் சென்றதாகவும், அவ்விடத்திலேதோ தீங்கிழைத்ததாகவும் பிரஸ்தாபம்.

சயிந்தை:—என் அருமை நாதா! இந்த அவதிக்கா நான் பிறந்தேன். என்னை மணம் புரிந்த காலத்து மன்னர்யாரும் மெச்சும்படி மணமாலை புனைந்து ஓர் தனிச் சிங்கம்போல் அவர் குழாத்து நின்ற நும் உரம் எங்ஙனம் மெலிந்தது. தங்களுக்கு என்ன கேடுநேரிட்டது? நாதா பாவியேன் தேவரீர்க்குத் தீங்குற்றபோது நும் பக்கலிலாவது இல்லாதொழிந்தேனே. என்னகொடுமை. ஆ! பாழுந் தெய்வமே! அந்த பாக்கியங்கூட எனக்குக் கிடைத்திலதே. இனி நான் எப்படி உயிர் வாழ்வேன். நாதா நான் இதோ உம்முடன் வந்து விட்டேன். (என மூர்சித்து விழுதல்).

சிந்தாமணி:—ஆ! என் அருமை மகனே! நினக்கும் இப்படிப்பட்ட கேடுவருமா. அந்த வேழத்தின் துதிக்கையைத் துணித்ததாலல்லவோ நினக்கு இக்கதிவந்தது. நீயே உடலென்றும் உயிரென்று மிருந்த நாங்கள் இனி எப்படி உன்னையகன்று உயிர்வாழ்வோம். இனி ஒருகணமும் உயிரை வைத்திருப்பதில்லை. இதோ நானும் நீ சென்ற விடம் வருகின்றேன் மகனே (எனக்கதறிக் கீழே விழுதல்)

மேகலை:—ஆ! ஆ! இதென்ன வாச்சர்யம். இவர்கள் யாவரும் ஒருங்கே வருந்துதலாகிய சம்பவம் ஏது நிகழ்ந்தது. ஏதோ விபரீதம் நடந்து தானிருக்கவேண்டும் நல்லது விசாரிப்போம். ஐயா! செட்டியாரே! ஆண்பாற்படும் தாமே இப்படிச் சித்தங்கலங்கினால் பெண் பாற்படும் நும்மவர்கள் எவ்வளவு தான் கலங்கார். ஏது நிகழ்ந்த போதிலும் நம்மால் செய்யத்தக்கதென்ன. யாவும் கடவுளின் செயலேயன்றோ இவ் வண்ணம் தாங்கள் யாவரும் துயருறுவதற்குக் காரணம் யாது?



வைரமணி:—அம்ம! பெண்கள் நாயகமே! பற்றெனும் பாசத்தனையைச் சேதித்த தம்போன்ற துறவியர்கட்கு என்ன குறைவு தான் உள்ளது. அருமையாய் மயானத்துக் கண்டெடுத்த என்னுயிர்த் துணையைப் பிரிந்தும் உயிர்வாழ்வதோ. இனி ஒருகணமுமாற்றேன். இப்பொழுதே உயிர் விடுவேன்.

மேகலை:—(திடுக்கிட்டு) என்ன! என்ன! மயானத்தில் கண்டதா எவ்விடத்தில்? எப்பொழுது?

வைரமணி:—கார்த்திகைத் திங்கள் கிருத்திகை நட்சத்திரத்தன்று அருமையாய்த் தவங்கிடந்து பெற்ற என் மகவு பிறந்தவப்பொழுதே மறித்தலும்; அதைக் கொண்டு போய்ப் புதைத்துத் திரும்பும் சமயத்து ஓர் குழந்தை அழுகுரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தலும் ஆதவனே தோன்றியாங்கு ஓர் மகவுகண்டேன்.

மேகலை:—ஆ தெய்வமே (என்று மூர்ச்சித்து விழுதல்).

வைரமணி:—என்ன ஆச்சரியம். ஏதுபற்றுமற்ற இத்தவ மாது நம் செய்தி கேட்டதும் மூர்ச்சித்து விழுந்துவிட்டது. அடி சிந்தாமணி சீக்கிரம் சென்று நீர் கொண்டுவா.

சிந்தாமணி:—நீர் கொண்டு வருதல்.

வைரமணி:—நீரைச் சந்தியாகிப் பெண்வாயில் ஊற்றிச் சோகத்தைத் தணித்தல்.

மேகலை:—அப்பா! மகனே! நின்னைப் பெற்றதொன்றறிய மற்றதொன்றுமறியேனே. நின்னை ஓர் தினமாயினும் என் பிள்ளை கலி தீர நின் குணவிசேடங்களை உசாவினேன் இல்லையே அந்தப்பாவி என்தோழியின் வார்த்தையை நம்பியன்றோ நின்னை அம்மயானத்து ஒதுக்கி வந்தது. வளர் மதிப்பிறைபோல் வளர்ந்து வல்லரவு விழுங்கியவாங்கு இறந்து விட்டாய் மகனே. நின் தந்தைபழி தீர்க்க வந்த கோடாலியல்லவோ வென்றெண்ணியிருந்தேன். நீயுமோர் வீரனென வெளிவந்து நின் தந்தையைக் கொன்ற பாதகன் மார்பைப் பிளந்து தனிமுடி சூடி அரசாள்வையே யென்றிருந்தேன். நான் எண்ணிய வெண்ணம் யாவும் அவலமாயிற்றே. நின் தந்தையார் இறந்ததையுமெண்ணாது நின் பொருட்டு உயிர் வைத்திருந்த யான் இனி என்ன செய்கேன்.? (தொடரும்)

# கைமருந்துகள்.

ஆசிரியர்:—எஸ். சிவசுப்பிரமணிய ஐயர், டாக்டர்,
ஆயுர்வேத ஆஸ்பத்திரி முனிசிபாலிட்டி, மன்னார்குடி.

1. *சகல ஜ்வரங்களுக்கும் கஷாயம்:*— சுக்கு, மிளகு, திப்பிலி, ஜீரகம். தாளீசபத்திரி, விஷ்ணுக்ராந்திவேர், நிலவேம்பு. வகைக்கு $\frac{1}{2}$ பலம் கஷாயமிட்டு தேன்சேர்த்து, 3 நாள் 6 வேளை கொடுக்கத் தீரும்.

தும்பையிலை, துளசி இலை, இரண்டையும், வாட்டிப் பிழிந்து கொதிக்கவைத்துக்கொடுக்க குளிர் ஜ்வரம் முதலிய சகல ஜ்வரம் முதலிய சகல ஜ்வரங்களும், தீரும்.

2. *வாதஜ்வரம்:*— (வலிகடுப்புடன் கூடியது.) சுக்கை சிறு துண்டுகளாக நறுக்கி, 1 தோலா எடுத்துக் கொண்டு, 2 தோலா சர்க்கரை எடுத்து சட்டியில்போட்டு நன்றாக சுருக்கி வாசனை வந்தவுடன் சுக்கையும் போட்டு வருத்து 1 சேர் ஜலம் விட்டு $\frac{1}{2}$ சேராக குருக்கி வைத்துக்கொண்டு சாட்பிட்டுவர தீரும்.

3. *பித்தஜ்வரம்:*— (விடாமலும், வாய்கசப்புடனும், மயக்கமும், வாந்தியும் கூடியது.)

பற்பாடகம், வெட்டிவேர், செஞ்சந்தனம், கொத்தமல்லிவிதை, வேப்பம்பட்டை, இவைகளை சம எடையாக எடுத்து மொத்த எடைக்கு 16 பங்கு ஜலம் விட்டு 8ல் 1 ஆக காய்ச்சி கொடுக்கத் தீரும்.

4. *முறை ஜ்வரம்:*— உத்தாமணிச்சாற்றை 1 பலம் அளவு எடுத்து கொஞ்சம் தேன் சேர்த்து காலையில் கொடுக்க 1, 2 வேளைகளின் தீரும.

இதே, கபத்துடன் இருந்தால் துளசிச்சாறு $\frac{1}{2}$ பலம் உத்தாமணிச்சாறு $\frac{1}{2}$ பலம் கொஞ்சம் தேன் சேர்த்து சாப்பிட தீரும்.

5. *விடாஜ்வரம்:*— (அதிகநாளைக்குத் தொடர்ந்து அடிப்பது) விஷ்ணுக்ராந்திவேர், மிளகரணை, வேப்பம்பட்டை, சிந்திற்கொடி, தும்பைவேர், துளசிவேர், சுக்கு இவைகளை கஷாயமிட்டு கொடுக்க தீரும்.

6. *கபஜ்வரம்:*— கண்டங்கத்திரிவேர், ஆடாதொடைவேர், முசுமுசுக்கை, சுக்கு, சிற்றாத்தை இவற்றை சஷாயமிட்டு கொடுக்க் தீரும்.



7. *வாயு:*—(தொடை, கண்டைக்கால், முழங்கால், இவைகளை வியாபித்து, சுவாதீனமில்லாமல் வலியுடன் கூடியிருந்தால்) சாட்டரணை, சிற்றரத்தை, நெருஞ்சிவேர், ஆமணக்குவேர், தேவதாரு கட்டை, சுக்கு, இவற்றை கஷாயமிட்டு கொடுக்க தீரும்.

8. *அஜீர்ணம்:*—(அக்னிமாந்தியம்) சுக்கு, வெல்லம், சேர்த்தும், ஜீரகம், உப்பு, சேர்த்தும் உட்கொள்ள நிவர்த்தியாகும்.

உப்பை ஜலம் விட்டு கரைத்து சுக்கின்மேல் பூசி அடுப்பில் கருகாமல் சுட்டு உப்பை தள்ளி சுக்கை தூள்செய்து $\frac{1}{2}$ அல்லது 1 தோலா சாப்பிட அக்னிமாந்தம் முதலியது போகும்.

9. *ரத்த பித்தம்:*—[நாசி, வாய், இவற்றால் ரத்தம் வருதல்] ஆடாதொடையை சமூலமாக கஷாயமிட்டு கொடுக்க தீரும். இதில் கொஞ்சம் தேன் சர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம்.

10. *பித்தத்துக்கு:*—அருகுவேர், கீழாநெல்லிவேர், பற்பாடகம் இவைகள் கஷாயம் செய்து கொடுக்கத் தீரும்.

11. *விக்கல்:*—அம்மான்பச்சரிசி இலையை அரைத்து அரைக்கால் சேர் வெள்ளாட்டுப்பால் சேர்த்து கொஞ்ச கொஞ்சமாக கொடுத்துவர வியாதி தீரும்.

12. *வாந்தி அரோசகம்:*—சுட்டமயிலிறகு சாம்பல், அரிசி திப்பிலி, ஏலம். இவைகள் சமபாகமாக சேர்த்து தேனில் கலந்து சாப்பிட வாந்தி நிற்கும். சக்குவான் என்கிற பேயிருமலும் நிற்கும்.

திராட்சைப்பழம், பேரீச்சங்காய், வேம்பு ஆர்க்கு, எலுமிச்சம் ஆர்க்கு, ஜீரகம், கொத்தமல்லி விதை. இவைகள் சேர்த்து கஷாயமிட்டு கொடுக்க வாந்தி, பித்தம், வயிற்றுப் பிறட்டல் முதலியது திரும். விபூதியில் குடத்தை கொளுத்திப் போட்டு அந்த விபூதியை தண்ணீரில் கரைத்து கொடுக்க காலராவில் உள்ள வாந்தி நின்று விடும். கடுகு பத்து மேல் வயிற்றில் போடவும்.

13. *அதிசாரம்:*— [ஜீர்ணமாகாமல் வயிற்றால் போவது.] சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், ஜீரகம். இவற்றை சூர்ணம் செய்து தேன் சர்க்கரை சேர்த்து கொடுக்க ஜீர்ணம் ஆகி மலம் கட்டும். மேலேகண்ட சூர்ணத்தை பிரண்டைச் சாற்றில் போட்டு காய்ச்சி சர்க்கரை தேன் சேர்த்து லேகியமாக கொடுத்தாலும் தீரும்.

மிளகையும் கட்டிக் கர்ப்பூரத்தையும் அம்மியில் வைத்து நன்றாக அரைத்து கொஞ்சம் வெல்லமும் சேர்த்து சூட்டுடன் கொடுத்தால் உடனே மலம் கட்டும்.

14. வயிறுகொட்டல், சீதபேதி:— சுரமில்லாமலிருந்தால், வில்வப்பழத்தை உடைத்து கஷாயம் போட்டு கொடுக்கத்தீரும்.

விளக்கெண்ணை, எலுமிச்சம்பழச்சாறு, நன்றாக நுரை உண்டாகும் வரையில் கலந்து சர்க்கரை சேர்த்துக்கொடுக்கதிரும். வெங்காயம், வெள்ளைப்பூண்டு, இவைகளை நெய், விளக்கெண்ணை, சேர்த்து வதக்கி உட்கொள்ள நிற்கும்.

வெள்ளாட்டுப்பாலும் எலுமிச்சம்பழ ரசமும் சேர்த்துக் கொடுக்க தீரும்.

சுக்கு, சாதிக்காய், மாங்கொட்டை பருப்பு, இவைகளை அரைத்து தேன், தயிர், முதலியவைகளில் கொடுக்க தீரும்.

மணத்தக்காளி சார் 2 உத்தரணி, மோரில் பிழிந்து கொடுக்க தீரும்.

மாதுளைப்பிஞ்சு, நெல்லிக்கொழுந்து, கொய்யாக் கொழுந்து, கசகசா, ஜீரகம், சோம்பு, மாசிக்காய், சாதிக்காய், இவைகளில் 1, 2. அரைத்து தேன், மோர், தயிர், பால், இவைகளில் கொடுக்கதீரும்.

15 இருமல்:—மணத்தக்காளி கீரை, வெள்ளைப்பூண்டு சேர்த்து, உப்பில்லாமல் சமைத்து சாப்பிட உஷ்ணத்தாலுண்டாகும் இருமல் தீரும்.

கண்டங்கத்திரி, துளசி, ஆடாதொடைவேர் இவற்றின் கஷாயத்தினால் அநேகவிதமான இருமல்களும் தீரும்.

16. நீர் அதிகமாகப்போனால்:— கிளுவப்பட்டையை அரைத்து எள்ளுப்புண்ணாக்கும் சேர்த்து களியாகக்கிண்டி கொடுக்க நிற்கும்.

பனங்கிழங்கு, நாவல்பட்டை, சீந்திற்கொடி, ஆவாரம்பூ இவைகளின் கஷாயத்தினால் நிற்கும்.

17. மூச்சித்திணறலுக்கு:—அரசித்திப்பிலி தூளை, முசுமுசுக்கைச்சாற்றில், சேர்த்துக்கொடுக்க திணறல் நின்றுவிடும்.

18. காமாலை:—கருவேப்பிலைச்சார், கீழாநெல்லிச்சார், இவைகளை பசும்பாலுடன் சேர்த்து காலை மாலை சாப்பிட தீரும்.

இலுப்பைக் கொழுந்து, மிளகு, ஜீரகம், வெள்ளைப்பூண்டு, வகைக்கு 1 வேளைக்கு ½ விராகனிடை முதல் 2 விராகனிடை வரையில் எடுத்து பசும்பாலில் அரைத்து இருவேளையும் 2, 3, நாள் சாப்பிட தீரும்.

தொடரும்

# விவசாயம்.

இராவ் சாகிப் கு. வி. கனகசபைப் பிள்ளை,

பௌதிக சாஸ்திர முறைகளில் விவசாயப் பொருள்களையும் வேலைகளையும் அறிவது அபிவிருத்திற்கு அவசியம். பெரும்போக்காக நிர்ணயமின்றி விஷயங்களைக் கூறுவது பொருத்தமல்ல. இங்கே அநுபவத்தில் வேண்டிய சில முக்கிய குறிப்புகளை சொல்லப்படும்.

"நெல்லுயரக் குடி உயரும்
குடிஉயரக் கோன் உயரும்."
"ஆற்றங் கரையின் மரமும், அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே;—ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை; கண்டீர்
பழுது உண்டு வேறோர் பணிக்கு." —ஔவையார்.
"உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
தொழுது உண்டு பின் செல்பவர்." —திருவள்ளுவர்.
"நீ பூமியிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட படியால், நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்."
—கிருஸ்துவ ஆதி ஆகமம் 3—19.
"வயல்களில் உன் உணவைத் தேடு"
"விவசாயத்தைக் கைக்கொள்; ஏனெனில்
விவசாயத்தில் கடவுள் அநுக்ரஹம் இருக்கிறது."
—முகம்மது நபி நாயக வாக்கு.

விவசாயம், கிருஷி என்பதை விசாரிக்க வேண்டுமானால் இரண்டு வகையில் அறியவேண்டும். [1] சரியான முறையில் பயிர் செய்வது எவ்விதம்? அதாவது நன்றாகச் செழித்து தானியம் அதிகம் விளையுமாறு வெள்ளாமை யிடுவது எவ்வண்ணம்? [2] இலாபகரமான முறையில் பயிரிடுவது எவ்விதம்? சரியான முறையில் பயிர் செய்வதும் இலாபமில்லாவிட்டால் அது தொழிலுக்கு முறையல்ல. எவ்வளவு செழிப்பாக பயிர் செய்தினும் நஷ்டத்திற்குப் பயிர் செய்வது அறிவீனம்.

2. இலாப நஷ்டங்கள் பல காரியங்களைப் பொருத்துள்ளன. அவைகளில் முக்கியமாய் கவனிக்கவேண்டியவை:—1. வித்தின் குணம், அளவு; அதிலிருந்து எழும் நாற்று, 2. நிலத்தின் இயற்கை வளமை, அதில் இடும் எரு, அதை உழுது செம்மை செய்தல், 3. ஆட்கள், காலாகால வேலையும், பொறுப்பும், கூலியும், மாடுகளும் அவைகளின் பலமும் திறமும், 4. மழை. தண்ணீர், பட்டம், பாய்ச்சல் வடிகால் சௌகரியங்கள், 5. முதற் பணம்-ரொக்கமும் தானியமும், கிஸ்தி வரி, கடன், சொந்தக்காரரினுடைய கவனம், பார்வை, 6. தானிய விலை, விற்பனை இடத்திற்கு அருகாமை, பாதை வசதி.

இவைகளில் மழையும் அதன் பயனாக தண்ணீர்ப் பாய்ச்சலும் தவிர மற்றவையெல்லாம், ஏறக்குறைய நம்முடைய முயற்சியால் திருத்தி விருத்தி செய்து கொள்ளக்கூடும். கிஸ்தி தானிய விலை பாதை முதலிய சர்க்கார், ஜில்லா அல்லது தாலுக்கா போர்டு, தேசப் பொருள் நிலைகளைப் பொருத்திருக்கிறது. அவைகளை நேரே கிராம வாசியான பயிரிடும் குடியானவர்களோ, மிராசுதார்களோ, தங்க விஷ்டப்படி அமைத்துக்கொள்ள முடியாது. ஆயினும் இவைகளைப் பற்றி முன் ஆலோசனைகள் செய்து அவைகளால் உண்டாகும் கஷ்ட சுகங்களைக் கவனிக்காவிட்டால், இலாப நஷ்டம் அறிய முடியாது. முதற் பணம், கடனில்லாமை, சொந்தக்காரரினுடைய கவனம் முதலிய அவரவர்களே எண்ண வேண்டியது. ஆதலின் முதல் மூன்று விஷயங்களுமே விவசாயம் என்னும் தலைப்பின் கீழ் கவனிக்கத் தக்கவை.

3. விதை.—

*விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமா?*
*அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை.*

விதையில் மூன்று பாகங்கள் உள்ளன. 1. மேல் தோல் 2. உணவு சத்து-மாவு, தைலம் 3. முளைக்கரு.

விதை எப்படி முளைக்கிறதென்றால் தண்ணீர் கொண்டு உப்பி, உணவு சத்தைச் சாப்பிட்டு, உஷ்ணங்கொண்டு காற்றுப்பட்டு முளை உற்பத்தியாகிறது. உழுத மண் சரியான பதன் அடைந்திருந்தால் முளை நன்றாக வர இடங்கொடுக்கும். விதை நன்றாக முதிர்ந்திருந்தால் முளைக்கரு நன்றாக உற்பத்தியாயிருக்கும்; இல்லாவிட்டால் முளை வராது. விதை நன்றாய் காய்ந்திருந்தால் அதற்கு வீரியம் அதிகம். ஈரமாக சில நாள் இருந்துவிட்டால் அல்லது விதைக்காமல்



நீண்டகாலம் வைத்துவிட்டால் வித்தின் வீரியம் குறைந்துவிடும். விதைக்கும் மணி தன் இனத்தில் கனமாகவும் பருமனாகவும் இருக்க வேண்டும். பூச்சி அடித்த நோய்ப்பட்ட வித்துக்கள் இருக்கப்படாது. இவ்வகையில் கவனிக்காமல் போவதால்தான் விதை ஜாஸ்தி செலவாகிறது.

ஒரு ஏக்கர் நெல் பயிரிட 16 சென்ட் பூமியில் சுமார் 36 பட்டணம் படி விதை அதாவது 1½ கலம் விதைக்கிறார்கள். பொருக்கி எடுத்த நல்ல விதைகளாக இருந்து நாற்றை பிடுங்கி, 1, 2 அலகுகளாகக் கிள்ளி நடவு நட்டால் பாதி விதைப் போதுமானது. ஏக்கர் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் இலாபமாகும். நல்ல விதைகள் வேண்டுமானால் நல்ல மணியாக நல்ல நிலத்தில் அலாதியாக விதைக்கெனப் பயிரிட்டுப் பொறுக்கி பூச்சிப் புழு ஈரம்படாமல் காப்பாற்றி ஒரு வருஷத்தில் பயிரிடவேண்டும்.

விதைக்காகப் பயிர் செய்வதையும், ஒரு சந்ததி விதையை ஒரே புலத்தில் பயிர் செய்தால் வருஷத்திற்கு வருஷம் விதையின் வீரியம் குறையும். விதைகளை பரீக்ஷைசெய்ய வேண்டும். அகலமான பாத்திரத்தில் நயமான மண்ணைப்போட்டு கணக்காக 100 விதைகளை விதைத்து பதமாகத் தண்ணீர் விட்டு உஷ்ணம் படும் இடத்தில் வைத்து முளைகள் வந்தவுடன் அவைகளை எண்ணி முன் பின் இல்லாதபடி ஒரே சமயத்தில் 75 முளையாவது வராவிட்டால் அவ்விதை சுகமல்ல. அல்லது 100க்கு 75 முளையே முளைத்தால் ஒண்ணேகாலே அரைக்கால் அல்லது ஒண்ணரைப் பங்கு விதை விதைக்கவேண்டி வரும்.

4. நிலம், புலம், வயல்.

மணல் உழுது வாழ்ந்தவனுமில்லை. மண் உழுது கெட்டவனுமில்லை.
களர் நிலத்திலிட்ட விதையும், சமர் இடத்தில் சென்ற சேனையும்,
பாத்திரமறிந்து பிச்சையிடு, க்ஷேத்திரமறிந்து வித்தையிடு.
கள்ளிவேலியே வேலி, கரிசல் நிலமே நிலம்.—பழமொழி.

நிலத்தின் மண் ராசியை அவைகளின் நிறங்களால் கரிசல், செவ்வல் எனவும், இயற்கைக்குணத்தினால் மணல், வண்டல், களி, இருமண், அடைமண், சுக்கான் எனவும், செயற்கைக் குணத்தினால் சதுப்பு, களர் எனவும், பயிர் வகையால் தோட்டக்கால், புஞ்சை, நஞ்சை யெனவும் பல வாறாகக் கூறப்படும்.

# நமது நாடும் கல்வியும்.

பொதுவாக நமது நாட்டின்கண் அரசாங்கத்தவரால் கல்விச் சாலைகள் மூன்றுபிரிவினதாக வகுப்பட்டுள்ளன. அவை ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி, உயர்தரக் கல்வி என்பனவாம். நமது நாட்டின் கண் இம்முத்திறக் கல்வியும் பயன் தரத்தக்க வழியில் அமைக்கப்படவில்லையென்பது பல பெரியோர்களின் அபிப்பிராயம். பொதுவாக எந்த நாட்டிற்கும் ஆரம்பக் கல்வியே, ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரம் போன்றது. நம் நாட்டுச்சிறுவர்கள், மழலைச்சொல் மாறுத தத்தம் நாட்டு மொழியில் எவ்வாறு எத்தகைய ஆரம்பக் கல்வி போதனையைப் பெறுகின்றனரோ அங்ஙனமே எத்தகைய உயர்தரக் கல்விக்கும் அஸ்திவாரம் போன்றதாம். ஆனால் துரதிட்டவசமாய் நமது நாட்டின்கண் கொடுக்கப்படும் எத்தகைய கல்வியும் செவ்விய பயனைத்தரவில்லை யென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். பலர் பத்திரிகை வாயிலாலும், சங்கங்களிலும், சட்ட சபைகளிலும் கூசாமற் பேசியுள்ளர். எனினும், அங்ஙனம் பயன் பெறாததற்குக் காரணம் என்னவென்று ஒருமித்த முடிவுக்கு யாவரும் வந்திலர். தலை நோவுக்குத்தலையணையை மாற்றுவதேபோல் பலர் பலவித சீர்திருத்தங்களும் செய்து வருகின்றனர். செய்யப் போகின்றனர். எனினும் எத்தகைய மொழியைக் கற்பதற்கும் இதர நாடுகளில் இருப்பதேபோல் நேர்மையான நோக்கம் இல்லாததே தான் காரணம் என்பது சற்று ஆராய்ந்தால் தெரியும். அதாவது நடுத்தரக் கல்வி பயிலும் ஒருவன், எஸ். எஸ். எல். சி. பட்டம் பெறவேண்டும் என்றும் உயர்தரக் கல்வி பயிலும் ஒருவன் எங்ஙனமாவது டிக்கிரி பட்டம் பெறவேண்டும் என்றும், லக்ஷியத்தைக் கொண்டு படிக்கிறார்களே ஒழிய கல்வியின் உன்னத லக்ஷியத்தைக் கொள்கின்றாரில்லை. இத்தகைய லக்ஷியத்தைக் கொண்டு, தன் முன்னோர் தேடிய பொருளைத் தோற்றுக்கற்ற கல்வியை, உண்மையிழந்து வயறு வளர்த்தற்கேற்ற வழியைத்தேடி யலைந்து தன் வாழ்க்கையில் வெறுப்புக் கொள்கிறான், ஆரம்பக் கல்விக்கோ, அத்தகைய உத்தியோக லக்ஷியமும் கிடையாது. ஆரம்பக் கல்விக்கும், உயர்தரக் கல்விக்கும் சொந்தமேயில்லை. எனவே ஆரம்பக் கல்வி பயிலும் ஒருவன், பொதுவாகப் படித்ததை மறக்கவும், அல்லது படித்த உதவியைக் கொண்டு படியாத பாமர மக்களை, விண்ணப்பங்கள் முதலியன



எழுதி ஏமாற்றவுந்தான் துணிகின்றான். எனவே நமது நாட்டுப்பண்டையோர் எல்லாத்துறைகளிலும் வல்லுநர்களாய் வாழ்ந்திருந்ததற்குக் காரணம் என்னையெனில், தத்தம் தாய் மொழியில், உயிர்க்குறுதி யூட்டும் ஜீவாதாரப் படிப்பை ஓரளவு கற்று வல்லவராயபின், ஜீவாதாரத்திற்கு வேண்டிய, வைத்தியம், சோதிடம், வான சாஸ்திரம், சிற்பம், முதலிய தத்தமக்கு ஏற்றகல்வியில் தேர்ந்தவர்களாயினர். எனவே நமது நாடும் ஆரம்பக் கல்வியும் மேம்பாடடையவேண்டுமாயின், ஆத்மார்த்திக ஞானத்தை வளர்க்கும், முறையில் கல்வி சீர்திருத்தப்பட்டு, உடற்குறு பயனையே பெரிதெனக் கொண்டு விளக்கும் போலிப் படிப்பில் பட்டம் பெற்ற பெரியோர்களின் ஸ்தானத்தில், ஆத்மார்த்த ஞானத்தை வளர்க்கும் தாய் மொழிப் படிப்பில் பட்டம்பெற்ற பெரியோர்கள் அமரவேண்டும். இது மிகப் பெரியதொரு வேலை. ஆனால் இதற்கிடையில் எத்தகைய சீர்திருத்தங்கள் வழங்கப் பெறினும், கல்வி வளராது என்பது திண்ணம். சாத்வீக குணத்திலும், தன்னடக்கத்திலும், ஆத்மார்த்த ஞானத்திலும் உலகு தோன்றியக் காலந்தொட்டுப் பயிற்சி பெற்று வந்த, தற்பாதுகாப்பையும், சுயநலப் பேயையும், அடிமைப் புத்தியையும் வளர்க்குந்துறையே, மிருந்ததொரு முறையில் கல்வி கற்கச் சொன்னால் எங்ஙனங் கல்வி பரவும் என்பது விளங்கவில்லை. எது எங்ஙனமாயினும், ஆரம்பக் கல்வி நமது நாட்டில் கொடுக்கப்படும் முறையும் அதற்கேற்ற ஆதரவும் சரியான வழியில் இல்லையென்பது திண்ணம் ஆகையால் ஆரம்பக் கல்வி யபிவிருத்திக்கான சாதனங்களை ஒருவாறு ஆராய்வோமாக.

1. ஆரம்பக் கல்வி போதிக்கும் பாடசாலைகள்:—தற்போது நமது நாட்டில் ஆரம்பக் கல்வி போதிக்கும் பாடசாலைகள் நான்கு பிரிவினதாக வகுக்கப்பட்டுள.

1. மேனாட்டு பாதிரிமார்களால் நடத்தப்படுவன.
2. தாலூக்கா போர்டுகளால் நடத்தப்படுவன.
3. தனிப்பட்ட நபர்களால் திரவியோபகாரம் பெற்று நடத்தப்பெறுவன.
4. அந்தந்த கிராமப் பஞ்சாயத்தார்களால் நடத்தப்படுவன.

இந் நால்வகைப் பாடசாலைகளுள்ளும் நாட்டுமக்களுக்கு மிகக் குறைந்த செலவில், சிறந்த படிப்பைத் தந்து வருவது, மூன்றாவது சொன்ன ஆசிரிய மானேஜர் பாடசாலைகள்தான் எனத் திட்டமாய்ச்

சொல்லலாம். எந்த நாட்டிலும் ஆரம்பக் கல்வி போதிக்கும் ஆசிரியன், உயர்ந்த ஞானமுடையவனாய், மலையைபோல் அசைக்க முடியாத வன்மையுடையோனாய், ஐயந்திரிபு அறக்கற்றவனாய் நிலத்தினுமிக்க பொறையுடையானாய், திராசுக்கோலினுமிக்க நடுவு நிலைமையுடையவனாய் எக்காலும் எல்லோராலும் விரும்பப்படுவனாய், தன்பால் அனுப்பப்படும் பால்மணமாறாக் குழவிகளிடம் தாயினுமிக்க அன்புகொண்டு இடனறிந்து காலமறிந்து உளங்கொளநூல் கொடுக்குங் கருத்துடையோனாய் இருத்தல் வேண்டும், என்பது எல்லாராலும் ஒத்துக்கொள்ளக் கூடியது. உடற்குறு பயனைத்தேடி அழகுபெற அணிந்து அலங்கரித்து வாழ்வதே இன்பமென எண்ணும் மேனாட்டிலுங் கூடத்தம் காலம்தத்தம் தாய் மொழியில் உயர்தரப் பட்டம்பெற்ற உன்னத புருஷர்களே உயர்ந்த ஊதியத்தில் ஆரம்ப வகுப்புகளுக்கு நியமிக்கப் பெறுகிறார்கள். அதற்கு நேர்மாறாக நமது நாட்டிலோவா, மிக மிகக்குறைந்த ஊதியத்தில், மிகத்தாழ்ந்த கல்வி கற்ற, ஆசிரியர்கள்தான் ஆரம்பப் பாடசாலைகளுக்குப் பொறுக்கி அனுப்பப்படுகிறார்கள். ஆனால் காருண்ய கவர்ன்மெண்டார், உயர்ந்த கல்வி யறிவாளிகள், ஆரம்பப் பாடசாலைகளுக்கு வருவதில்லையென்ற காரணங் கூறுகின்றனர். ஆயிரக்கணக்காகத்தான் கற்ற கல்விக்குத் தன் சொத்தையிழந்து, உண்ண உணவுக்கு உத்தியோகந்தேடுமொருவன், 5, 10, சம்பளத்திற்கு வாவெனில் வருவனோ என்பது யோசிக்கத்தக்கது. எனவே உபாத்தியாயர்களது அறிவும் அவர்கள் வருவாயும் (ஊதியமும்) ஒருங்கே உயர்த்தப் படல்வேண்டும் என்பது திண்ணம்.

நமது தமிழ்நாட்டில் பெரும்பான்மையும் ஆரம்பக் கல்வியென்பது கிராமாந்தரப்படிப்பு. ஒவ்வொரு கிராமத்திலும் எழுதப் படிக்கத் தெரியாத மனிதனாயினும், இராமாயணம், பாரதம், திருவிளையாடல், பெரிய புராணம் இவைகளைப்பற்றியும் இவைகளையெழுதிய புலவர்களைப் பற்றியும் தெரியாதவனும் கேளாதவனும் பெரும்பான்மையுமில்லையென்பது உறுதி. நிற்க, எழுதப்படிக்கத்தெரியாத ஒருவன், 1-320 வரை எழுதுகோலும் கடிதமுமின்றி வாய்மொழியாகப் போடக் கூடிய கணித சாஸ்திரத்தையும், ஆகாயத்தில் உள்ள மீன்களைப் பார்த்த மாத்திரத்தில் கணித்துக் கொடுக்கும் திறமை வாய்ந்த வான சாஸ்திரத்தையும் உடையவன் இக்காலத்திலும் கிராமாந்தரங்களில் அத்தகைய மாந்தர் நூற்றுக்கணக்கில் இருக்கின்றனர். ஆனால், தற்காலப் படிப்பில் தேர்ந்த தேர்தல் அவர்கள், பாமர மக்களென்

190335


# HARIDASAR'S FAMOUS SIDDHA REMEDIES.

1 **KUKWA** for **WHOOPING COUGH:** All foreign & Indian remedies except **Haridasar's Kukwa** (*Registered*) found defective: gives repid relief & cure. ... ... Rs. 1 0 0

2 **CHLORO-SALINOL** the great **Hari Dasar's Cholera Drops** has never failed: ***30 years tried*** & fined to give cent per cent results in **Cholera**, Diarrhoea, Colic pain etc. Rs. 1—4 For dispensaries 4 oz. bots Rs. 4 post extra.

3 **ENNA OIL** The brain cooling **Bathing Oil** for the summer: cures all kinds of eye diseases: good for teachers & students. Rs. 1 4 0 Postage extra.

4 **NEURAL OIL** Wonderful **Bathing Oil** for curing **Head Ache** of all kinds, especially in students & teachers. ... Rs. 1 4 0 Postage extra.

***CATALOGUE FREE.***

Only to **Teachers** & **Vaidyars** a reduction of Re. 1 for every five rupees will be made, on orders for Rs 5. & over.

My special Treatment for **DIABETES & ASTHMA**: for other medicines write for paticulars to

Dr. H. Devadoss B.A., L.T., M.T.Sc.,

Siddha Physician,

DASARPURAM, TINNANUR R.S.

# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்.

**1. "கக்வா"**

கக்குவானுக்கு மிகவும் கைகண்டது; ரிஜிஸ்டர் செய்யப்பட்டது இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப்பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள், ... புட்டி ரூ 1

3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனும்

**2. க்லோரோ சாலினால்**

இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து: தவறினதே கிடையாது; அபூர்வமான மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா' பேதி, வயிற்றுநோய், இவைகளை விரைவில் நீக்கும்.

புட்டி ரூ 1—4—0

**3. என்னாத் தைலம்.**

ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகல விதகண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புக்களிலுள்ள மேகச்சூடு நீங்கும்.

புட்டி விலை ரூபா 1 4 0

**4. நியூரல் தைலம்.**

ஒற்றைத்தலைவலி முதல் சகலவிதமான தலைவலிகளையும் நீக்கும். 25 வருஷ அனுபோகமுள்ளது. புட்டி ரூ. 1—4—0 தபால் செலவு வேறு.

மருந்து காட்லாக் இனும்.

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்கு மாத்திரம் ரூ 5, மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1 தள்ளி கொடுக்கப்படும்.

ஆஸ்தமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு

கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

DR. H. தேவதாசர் B. A., L. T., M. T. Sc.,

தாசர் சித்த வைத்தியசாலை,

தின்னனூர், R. S.

தாசர் பிரஸ், தின்னனூர் R.S.




றும் நாகரிகமற்றவர்கள் எனவும் புறக்கணிக்கப்படுகின்றனர். இத்தகைய மக்கள் நிறைந்துள்ள கிராமஜனங் களுக்கிடையில், தாய்மொழியில், நாட்டு வழக்கப்படி தேவையான கல்வி ஒரு சிறிதும் இல்லாமல், பி. ஏ. எம். ஏ. எஸ். எஸ். எல். ஸி. பட்டம், மட்டும் பெற்ற ஆசிரியர்கள், ஒரு சிலர்தனித்து வாழ இயலுவதில்லை. இவர்களும், இவர்களது படிப்பும் கிராமஜனங்களால் பெருப் பான்மையும் இகழப்படுகிறது. உபாத்தியாயர், கிராம ஜனங்களைத் செய்ய முடியாது போய்விடுதலால், தனது மேலதிகாரிகளைத் திருப்திசெய்து காலங்கடத்தப் பார்க்கிறார். ஒரு உபாத்தியார் கிராமத்திற்குச் சென்றவுடன் அக்கிராமத்திலுள்ள பெரியோர அவ்வுபாத்தியாரைப் பரீக்ஷிக்க விரும்புகின்றனர். நேரடியாய்ப்பரீட்சை செல்வதின்றி மறைமுகமாக, நடத்திய பரீக்ஷையில் உபாத்தியாயரைத் தோல்வியடையச் செய்கின்றனர். அர்த்தம் பிள்ளைகளிடத்தில், உபாத்தியாரைக் கேட்கும்படி, பற்பல கேள்விகளையும் நாட்டுக்கதைக்கு களையும் கொடுக்கின்றனர். உபாத்தியார் தமது அறியாமை வெளிப்படுத்தாமல், அவர்கள் நாகரீக மற்றவர்கள் என்றும், தான்புதிய நாகரீகத்தில் தேர்ந்தவனென்றும், கிராயஜனங்களுக்குத் தெரியாத அரை குறையாகத்தாம் கற்றறிருக்கும் ஆங்கிலத்தைக் கொண்டும், பின்னக் கணக் கணக்குகளைக் கொண்டும் தமது நடையுடையவடிகளாலும் அவர்களை அடக்கப்பார்க்கிறார். இதனால் அநேகமாக எல்லாக் கிராமங்களிலும் நாளடைவில் இரண்டு கக்ஷிகள் உண்டாகின்றன. இங்ஙனமிருக்கப் பிள்ளைகள் வந்தோ, வராமலோ. பள்ளிக்கூடம் அவ்வூரில் இருப்பதாக, அதிகாரிகளுக்குக் கணக்குக்காட்டுவது உபாத்தியாயருக்குத் திண்டாட்டமாய் விடுகிறது. இத்தகைய, குறைகள், உபாத்தியாயரின் தன் மதிப்புக்குப் பங்கமேற்பட்டு, கல்வியிலாகா அதிகாரிகளுக்கும், சபவாட்சிசபை அங்கத்தினர்களுக்கும், தாம் அடிமையாக மாறி அவர்களின் தயவைச் சம்பாதிக்க வேண்டிய நிலையை உண்டாக்குகின்றன. எனவே ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், தற்கால நாகரீகப் படிப்பில் ஓரளவும், பண்டைக் காலத் தமிழ்க்கல்வியில் ஓரளவும் கற்று வல்லவராயிருந்தாலொழிய, கிராமத்தில் திறப்படத்தும் பாடசாலையை நடத்த இயலாது. தற்போது இதற்கு உபாயங் கூறலாம் தற்காலம் உள்ள போதனாமுறைப் பள்ளிகளுக்குப் பதிலாக, சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ்பண்டிதர்களுக்குக் கொடுக்கும் பயிற்சியையே, ஆரம்பாசிரியர்களுக்கும் கொடுத்தால், ஒரு சில வருஷங்களில், இக்குறையை ஈடு செய்யலாம்.

இதற்கு, ஒவ்வொரு தாலூக்கா போர்டுகளும் தங்கள் போர்டில் உள்ள சில ஆசிரியர்கள் தங்கள் பொறுப்பில் ஹை கலாசாலைப்படிப்புக்கு அனுப்ப முயற்சி யெடுப்பது சாலச் சிறந்த தொருவழி,

### தனிப்பட்ட மானேஜர்கள்

இத்துறையில், திரவியோபகாரம் பெறும் ஆசிரிய மானேஜர்கள், கிராம ஜனங்களோடு ஒத்துழைப்பதால், அவர்களின் பாடசாலைகள் எவ்வளவு கேவலமாயிருந்தாலும் ஒரு வருஷ காலத்தில், தங்கள் திரவியோபகாரம் பெறுவதற்காக ஒரு சில மாத காலங்கள் நடத்தினாலும், கிராம ஜனங்கள் அதை ஆதரிக்கின்றனர். ஆனால் முன்னர்க் கூறியதேபோல் இவர்களுக்குத் தற்கால நாகரீகம் ஒரு சிறிது இல்லாதது பெருங்குறை, இவர்கள் தொன்றுதொட்டு ஒரே கிராமத்தில் வசித்து வருபவர்கள். கிராம ஜனங்களைப்போல், வைத்தியம், சோதிடம், மந்திரம், தந்திரம், இதில் நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களுக்கு, கவர்ன்மெண்டு கொடுக்கும் திரவியோபகாரம் வீதி கூட்டும் தோட்டியின் சம்பளத்திலும், பாதியாகக் குறைக்கப்பட்டிருந்தாலும், ஸ்தல ஸ்தாபனப் பள்ளிக்கூடங்கள் ஒரு புறமும், மிஷனரிப் பள்ளிக்கூடங்கள் ஒரு புறமும். பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள் ஒரு புறமும், சூழ்ந்து நெருக்கினாலும், இத்தனிப்பட்ட ஆசிரிய மானேஜர்களின் பாடசாலைகளை நூற்றுக்கு ஐம்பதளவாகக் கூட குறைக்க முடியவில்லை யென்பது திண்ணம். அரசாங்கத்தார் இத்தகைய பாடசாலைகள் இல்லாவிடில் ஆரம்பக் கல்வி பூர்த்தியாகாதென்று வெளிப்படையாகச் சொல்லிவந்தாலும், அரசாங்கச் சட்டதிட்டங்களும் அவற்றை யனுசரித்த, கட்டுத்திட்டங்களும், அவற்றைக் கையாளும் அதிகாரிகளும், ஹை பாடசாலைகளுக்கு அபிவிருத்திக்கேற்ற உதவியை உள்ளன்போடு உதவுவதில்லை யென்பது திண்ணம். இத்தியாதி காரணங்களால் ஒவ்வொரு ஜில்லாவிலும் திரவியோபகாரமின்றி, அரசாங்கத்தாரின் மேற்பார்வையுமின்றி அநேக ஆரம்பப் பாடசாலைகள் நடத்தப்பட்டுவருகின்றன. பெற்றோருடன் கலந்து, அவர்கள் கோரும் வண்ணம் கல்வியைத்தரும், பாடசாலைகள் தான் சற்று உயிருள்ளவையாயிருக்கின்றன. கிராம ஜனங்களை மூடர்களெனக் கருதி அவர்களுக்குப் புதிய நாகரீகத்தைக் கற்றுக் கொடுக்கத்தோன்றிய பாடசாலைகள் உயிரற்ற பிரேத நிலையிலேயே, யிருக்கின்றன. இவைகளால், ஆசிரியர்களது கல்வி வளர மேனேஜ்மெண்டுகள் வழிதேடவேண்டும். உதாரணமாக, தாலுக்கா போர்டு



மிஷன் சங்கங்கள், ஆசிரிய மானேஜர் சங்கங்கள், முதலியன, தமிழ் இலக்கண இலக்கிய புத்தகங்களில், சிலவற்றில் அதாவது திருக்குறள், இராமாயணம் பாரதம் போன்ற பகுதிகளில் தேர்ச்சிபெறுவதற்காக ஆசிரியர்களுக்குத் தனிக் கழகங்கள் அமைத்து அதில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்தல் மிக அவசியம்.

### பெற்றோர்கள்

பண்டைக்கால ஜீவாதாரப் படிப்பில் ஆழ்ந்த சிந்தையுள்ள, மக்கள் நிறைந்த கிராமங்களில், பெற்றோர்களைத் தத்தம் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும்படி. தூண்டினால் அவர்கள், "எங்கள் பையன் இப்பள்ளிக் கூடத்தில் படிப்பதனால் எங்களுக்கு என்ன சாதகம் இருக்கிறது. ஒரு பஞ்சாங்கம் பார்க்கத் தெரிகிறதா, நாள், நக்ஷத்திரம் பார்த்துச் சொல்லமுடிகிறதா, கதை காரணங்கள் படிக்கின்றானா அல்லது, தற்கால முறையில் ஏதாவது உத்தியோகங்கிடைக்கிறதா, எதற்காக நாங்கள் படிக்கவேண்டும். | எனக்கேட்கிறான். இதற்குப் பதில் ஆசிரியர்களாலும் அதிகாரிகளாலும் சொல்லமுடிவதில்லை. ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்கள் சட்டசபை அங்கத்தினர்கள் இதர, தேச சேவை செய்வோர் இவர்கள் நமது நாட்டு மக்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் படியாதவரெனக் கூசாமல் கூறுகின்றனர். அவர்கள் சொல்லும் படிப்பு என்பது ஓட்டர் சாபிதாவில் உள்ள பெயர்களைப் படித்தறிவதுதான் என்றால் நமக்கு ஆக்ஷேபணையில்லை. அஃதன்றி கல்வியின் லக்ஷியம் வேறு ஏதாவது வைத்துக்கொண்டு பார்த்தோமேயானால், தற்கால ஆரம்பக் கல்வி எந்த லக்ஷியத்திலும் கொண்டு சேர்ப்பதில்லையென்பது திண்ணமாய்த் தெரிவதால், கிராமாந்தர ஜனங்களுக்கு இத்தகைய படிப்புத் தேவையிராது. எவ்வளவு பிரசாரம் செய்யினும் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பார்கள்.

(தொடரும்)

### ரைட் ஹானரபில் ஸாஸ்த்திரியார்.

இங்கிலாந்திலும், வெல்ஸிலும். பிள்ளைகள் படிக்கும் தொகை. 4,930,076. ஒரு பிள்ளைக்கு படிப்பிற்காக செலவாகும் தொகை 13 பவுன் அதாவது ஏறக்குறைய ரூ. 130 இந்தியாவில் ரூ. 20.

கல்வியின் முக்கிய நோக்கமென்னவெனில் நாம் ஒருவருக்கொருவர் அன்னியோன்யமாக நேசித்து சகோதரபான்மையுடன் சுகமாக வாழ்வதே.

(ஸர். மீர்ஸசு. ஸ்மாயில் வான் மைசூர்)

# சங்கக் குறிப்புகள்.

ஆரம்பாசிரியர் சங்கம். குலசேகரப்பட்டணம்.

30-6-34 திருச்செந்தூர் ரேஞ்சு ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு, வ. இ. நாராயணய்யர் தலைமை வகித்தார். சேம்பியன் ஸ்கீமைப் பற்றி திரு, சிவ குருநாதம் பிள்ளை சாதகமாகவும் திரு, எஸ். வ. நாராயண அய்யர் பாதகமாகவும் பேசினர்.

தென்காசி

7-7-34 ஸீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு, பி சுப்பராய பிள்ளையவர்கள் தலைமை வகித்தார். ஸ்ரீமான் இராஜ சுப்பைய்ய அவர்களால் "படிப்பு என்பதைப்பற்றியும், ஆசிரியர் ஸ்ரீமான் சங்கரலிங்கம் அவர்களால் "உபாத்தியாயரும் பொது நல ஊழியமும்" என்பதைப் பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

மேலகரம் திருநாவுக்கரசு எலிமெண்டரி பாடசாலையின் வருஷ விழா

1-7-34 திருநெல்வேலி ஜில்லா கல்வி யதிகாரி திரு, கே. என். அப்பாசாமி ஐயர் தலைமை வகித்தார். திரு, நாறும்புநாத தேசிகர் அவர்கள் "மாணவரும் ஒழுக்கமும்" என்பதைப்பற்றியும், உயர்திரு, தி. ப. சுப்பிரமணிய தாஸ் அவர்கள் கல்வி என்பதைப்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பொள்ளாச்சி ரேஞ்சு ஆசிரிய மானேஜர்கள் சங்கம்.

19-4-34 திரு, கே. மலைய முதலியார் அக்கிராசனம் வகித்தார். இச்சங்கத்தில் தீர்மானிக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள்.

1. எல்லா உபாத்தியாயர்களின் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் உயர்தரப்படிப்பு இலவசமாக அளிக்க அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிரப்பிக்க வேண்டுமென்பது.

2. கிராமாந்திரங்களிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு (கட்டிடங்களுக்கு) வாடகை கொடுத்துதவ வேண்டு மென்பது.

3. போர்ட் செயின்ட் சார்ஜ் கெஜட்டில் வெளிவரும் கல்விப் பகுதியை இலவசமாக எல்லாச் சங்கங்களுக்கும் அரசாங்கத்தார் அனுப்பவேண்டுமென்பது.



4. ஒவ்வொரு ரேஞ்சுக்கும் குறைந்தது 2 ஸ்தாபனங்களாவது ஜில்லா கல்விச் சங்கத்தில் எய்டட் பாடசாலை மானேஜர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்பது.

5. லோயர் எலிமெண்டரி முறைபயின்ற ஆசிரியர்களின் சர்டிபிகேட்டை, யாதொருவித பரீக்ஷையில்லாமல் ஹையர் கிரேட்டாக மாற்றி உதவி செய்யவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது.

உபாத்திமைச் சங்கம், காஞ்சி சென்டர் செங்கம் ரேஞ்சு,

7-7-34 திருச்சிறுபள்ளி ஜில்லா அரியலூரில் கூடிய உபாத்தியாயர்கள் மகாநாட்டிற்கு திரு, வ, மேத்து சாலா அவர்கள் கேட்டுக் கொண்டபடி ரூ. 2—3—0 மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டது.

ஆசிரியர் மேத்து சாலா அவர்கள் சுதேச மித்திரன் போன்ற பல பத்திரிகைகளிலும் பண விஷயமாய், கணக்கில்லாமல் அடிக்கடி தெரிவித்துக் கொண்டும் பல சங்கங்கள் கவனியாதிருப்பின் ஹைடி அரிய விஷயங்கள் பூர்த்தியாவதற்கு தடையாகும், என்பதை சகோதர ஆசிரியர்கள் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

ஆசிரிய மானேஜர்கள் சங்கம் ஆத்தூர் ரேஞ்சு

10-6-34 கீழ்கண்ட நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அக்கிராசனர் கே. அப்துல் ஹமீத் சாயப்
காரியதரிசி. ஆத்தூர் கே. சின்னசாமி ஐயர்.

காரியகமிட்டி மெம்பர்கள்

1. சுந்தரய்யர், 2. டி. எஸ். அப்பாசாமி ஐயர்
3. பி. முத்துசாமி ஐயர், 4. வைத்தியலிங்கம்,
5. முத்துசாமி நாயுனர்.

உபாத்திமைச் சங்கம் மன்னார்குடி.

5-5-34 என். எஸ். வெங்கடேச ஐயர் தலைமை வகித்தார் திரு, என். எஸ். சுப்பிரமணிய ஐயர், "உபாத்தியாயருக்குரிய அவசியமான குணங்கள்" என்பதைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார். கீழ்கண்ட தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன.

1. ஆரம்பாசிரியர்களின் முன்னேற்றத்திற்காகவும், ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்காகவும், உழைத்துவரும் ஆரம்பக் கல்வி "மாத

சஞ்சிகைக்கு 1934-1935 சந்தா தொகை ஒரு ரூபாய் முன்பணமாக அனுப்பும்படி தீர்மானிக்கப்பட்டது.

2. மன்னார்குடி தாலுக்கா, போர்ட் பாடசாலைகளில் சனிக்கிழமைகளை அரை விடுமுறை நாட்களாக பாவிக்க தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுமாறு தீர்மானிக்கப்பட்டது.

## புதுக்கோட்டையில் ஆரம்பக் கல்வி

மொத்தம் 334 ஆரம்ப பாடசாலைகள். ஸ்டேட் மூலம் நடத்தப்படுபவை 177. எய்டட் பாடசாலைகள் 67. ஸ்டேட் உதவியின்றி நடக்கும் பாடசாலைகள் 90. மொத்தம் வாசிக்கும் பிள்ளைகளின் தொகை. ரூ. 17752, கல்விக்காக செலவாகும் தொகை. ரூ. 186968. ஆரம்ப பாடசாலையில் சராசரி ஒரு குழந்தைக்கு செலவாகும் தொகை 10-0-10.

## கொச்சியில் ஆரம்பக் கல்வி

சர்க்காரால் நடத்தப்படும் பாடசாலைகள் 133. 35000 பிள்ளைகள் செலவு ரூ. 373573. எய்டட் ஏஜென்ஸிகளால் நடத்தப்படுபவை 406 பாடசாலைகள். பிள்ளைகள் ஏறக்குறைய 100000 செலவுரூ-426678 அரசாங்க பாடசாலைகளில் ஒரு குழந்தைக்கு ஏறக்குறைய 10-0-0 எய்டட் பாடசாலைகளில் ஒரு குழந்தைக்கு ரூ. 4-0-0 ஆகின்றது.

## குழந்தைகள் மகாநாடு. 28 4-34

கராச்சியில், சுமார் 1,500 சிறு குழந்தைகள் ஓர் மகாநாடு கூட்டினதாம். அந்த மகாநாட்டில், இந்தியாவில் முதலாளித்தனம் ஒழியவேண்டுமென்றும், ஜனங்கள் சுதேசசாமான்களை ஆதரிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. உலகத்திலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் நல்வரவு கூறி அக்குழந்தைகள் மகாநாட்டை முடித்தனவாம். மகாநாட்டை ஆரம்பிப்பதற்கு முன் சிறு குழந்தைகள் காரச்சியிலுள்ள முக்கிய வீதிகளில் ஊர்வலமாக வந்தனவாம்.

"நமக்கு வீட்டுத்துன்பங்களும் வெளித்துன்பங்களும் என்றும் நம்மை சூழ்ந்துகொண்டு தானிருக்கும். அதனால் நம்முடைய கோபத்தையும், மனவருத்தத்தையும், குழந்தைகளிடத்தில் நாம் காட்டுதல் தகாது. பாடசாலையானது ஒரு தெய்வீகமான கோவில். அதினுள் நுழையும் ஒவ்வொரு ஆசிரியனுடைய மனமும், இருதயமும் பரிசுத்தமாக இருத்தல்வேண்டும். அவ்விதம் ஆசிரியர்கள் நடந்துகொள்ளவில்லையாகில், அவர்களை நாம் தேசத்துரோகி யென்றுதான் சொல்ல வேண்டும்"

170835


# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. எ. எல். டி. இயற்றியவை.

### கலைமகள் வாசகங்கள்

வி. வீரராகவன், எம். எ. இயற்றியவை.

கலைமகள் வாசகம் முதல் வகுப்பு 0 2 0
இரண்டாம் வகுப்பு விலை அணா 3
மூன்றாம் வகுப்பு ,, 4
நான்காம் வகுப்பு ,, 5
ஐந்தாம் வகுப்பு ,, 6

### கலைமகள் கதாவாசகம்

முதல் புத்தகம் விலை ... 0 2 0
இரண்டாம் புத்தகம் விலை ... 0 3 0

### கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாயக்கர்.

1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா 0 5 0
2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, 0 6 0
3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, 0 8 0
4-வது புத்தகம் (5-வது வகுப்பு) ,, 0 9 0

### நீதிக்கட்டுரைக் கோவை

வி. ஞானதிக்கம், பி. எ. எல். டி.

முதல் புத்தகம் அணா ... 0 4 0
இரண்டாம் புத்தகம் ,, ... 0 7 0
கலைமகள் நீதிக்கதைகள் ,, ... 0 4 0

### இந்துதேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர் ரங்கசாமி ஐயங்கார், எம். எ., எல். டி.

முதற் புத்தகம் விலை அணா ... 0 4 0
இரண்டாம் புத்தகம் ,, ... 0 5 0

எஸ். ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி.எ., எல். டி. எம். ஆர்.எ.எஸ்.

வட ஆற்காடு பூகோளம் அணா ... 0 4 0
செங்கற்பட்டு பூகோளம் ,, ... 0 5 0

### பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். எ., எல். டி.

முதற் புத்தகம் விலை 0 5 0 இரண்டாம் புத்தகம் 0 7 0
மூன்றாம் புத்தகம் 0 6 0 நான்காம் புத்தகம் 0 8 0
ஐந்தாம் புத்தகம் 9 0 0

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.
நெ. 2, சுங்குவார் பீச்சு ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற தேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

40 மாத்திரைகள் அடங்கிய

## மதனமஞ்சரி




இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி தேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

டப்பி 1-க்கு ரூபா 1.

இல்லர வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்

இனம்! வைத்திய வித்தியா இனம்!!

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினுல் தபால் சிலவு இல்லாமல் அனுப்பப்படும்.

மதன மஞ்சரி பார்மஸி, 1-94 சைனு பஜார் ரோட், மதருஸ்.

---

# சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினுல் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள், தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி, வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும். 32 மாத்ரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.

இனம்! இனம்!! இனம்!!!

'இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி'

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்
26, பிராட்வே, மதருஸ்.

---

குறைந்த விலை! உயர்ந்த நிலை!! சிறந்த பயின்!!!

## போக சக்தி குளிகை

இது ஸ்த்ரீ புருஷ சுகத்தில் ஈடுபடுபவர்களுக்கு அபாரமான ஆண்மையைத் தந்து நரம்புகளுக்கு அடங்காத வலிவை யளித்து நீர்த்திருக்கும் விந்து தாதுக்களை கெட்டிப்படுத்தி இழந்துபோன புருஷசக்தியை திருப்பியமைத்து போகத்தை சில நிமிஷநேரம் நீடிக்கச்செய்து போக சக்தியை அபாரமாய் அள்ளிக் கொடுப்பதால் அநேகரால் புகழப்படும் இவ் வருமையான அவிழ்தத்தை ஒரு முறை உபயோகிக்கின் இதன் உண்மையை அனுபவத்தில் தெரிந்துக்கொள்வீரென இத்துடன் நிறுத்தினேம். பத்தியம் கிடையாது.

5-நாள் சாப்பிடக்கூடிய 10 குளிகைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 1 4 0
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

அரசு மெடிகல் ஹால்,
75. நைனியப்பன் தெரு, மண்ணடி மதருஸ்

ரிஜிஸ்டர் நெ. 2912

# எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர்: மணி திருநாவுக்கரசு முதலியார்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 2 | 6 |
| இரண்டாம் ,, | .... | 0 | 3 | 0 |
| மூன்றாம் ,, | .... | 0 | 4 | 6 |
| நான்காம் ,, | .... | 0 | 5 | 6 |
| ஐந்தாம் ,, | .... | 0 | 6 | 6 |

## பொற்காலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | .... | 0 | 5 | 0 |
| இரண்டாம் ,, | .... | 0 | 6 | 0 |
| மூன்றாம் ,, | .... | 0 | 8 | 0 |
| நான்காம் ,, | .... | 0 | 9 | 0 |

## இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ., எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |

## சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ. எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் ஐ எஸ். ஏ.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் வகுப்பு மூன்றாம் புத்தகம் | 0 | 5 | 0 |

## அறநெறி விளக்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| 6-ஆம் ,, மூன்றாம் புத்தகம் | 0 | 7 | 0 |

## ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்மந்த முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 | 2 | 0 |
| ,, அதிபத்த நாயனார் | 0 | 2 | 0 |
| ,, ஏனாதிநாத நாயனார் | 0 | 3 | 0 |
| ,, நந்தனார் | 0 | 5 | 0 |

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

பி. வீராகவன், அவர்களால், சென்னை மண்ணடி, புதுத் தெரு, நெ. 94-95 இல்லத்தில் "அசோஸியேஷன்", அச்சுக் கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.